உ

# இல்லறமும் துறவறமும்

## (ஒரு புதுமாதிரி நாடகம்)

நாடகப் பேராசிரியர்

**ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,**

அவர்களால் இயற்றப்பட்டது.

### இவர் எழுதிய மற்ற நூல்கள்

லீலாவதி சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்கு, சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனா, புஷ்பவல்லி, உத்தமபத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற் பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றும் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திர ஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான் பேட்டை சப் அஸிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத் தனம், முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடக மேடை நினைவுகள்—ஆறு பாகங்கள், நாடகத் தமிழ், யயாதி, பிராமணனும் சூத்திரனும், வாணீபுர வணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னாவளி, கண்டுபிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக் கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி? ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக்காக்ஷி, விடுதிப் புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுரம் நாடகச் சபை, சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீந்தார், சிவாலயங்கள் இந்தியாவிலும் அப்பாலும்—ஐந்து பாகங்கள், சிவாலய சில்பங்கள், சதி சக்தி, மனை ஆட்சி, இந்தியனும் ஹிட்லரும், தீபாவளி வரிசை, காலக் குறிப்புகள், சுபரமண்ய ஆலயங்கள், தீயின் சிறு திவலை, கலையோ காதலோ, உணவுப் பொருள்கள், சபாபதி துவிபாஷி, சபாபதி துணுக்குகள்.

முதற் பதிப்பு

காபிரைட்] 1953 [விலை ரூபாய் 2.50

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை—1

உ

எனது தந்தை தாயார்

**பம்மல் - விஜயரங்க முதலியார்**

**பம்மல் - மாணிக்கவேலு அம்மாள்**

எனது நண்பர்

**சி. ரங்கவடிவேலு**

ஞாபகார்த்தமாக இந்நூல் அச்சிடப்பட்டது

# இல்லறமும் துறவறமும்

## நாடக பாத்திரங்கள்

**கீதாநந்தர்** ....ஓர் துறவி
**ஆனந்த ராஜு** ....கதாநாயகன்
**சுவர்ணபாய்** ....கதாநாயகி
**வைத்தியலிங்க முதலியார்**
**நாராயணசாமி முதலியார்** } .... குருபாதம் சினேகிதர்கள்
**குருபாதம்** ....பி. ஏ. பட்டம் பெற்றவன்
**ஏகாம்பரம்** ....புகைப்படம் எடுப்பவன்
**மாணிக்கவேலு** ....அண்ணுமலைக் கல்லூரியில் படிக்கும் வாலிபன்
**பத்மநாபம்** ....குருபாதம் சிநேகிதன்
**வீராயி** ....ஓர் வேலைக்காரி
**அங்கமுத்து** ....ஜெவந்தி அம்மாள் குழந்தை
**ஜெவந்தி அம்மாள்** ....பேச்சிமுத்துவின் பெண்
**பேச்சிமுத்து** ....சினிமா நடிகை
**நமச்சிவாயம்** ....கீதாநந்தர் வேலையாள்
**செல்லபெருமாள்** ....ஓர் கேடி
**கனகம்** ....செல்லபெருமாள் வைப்பாட்டி
**கோமதி** ....ஓர் ஊமைப் பெண்
**ராமானுஜ முதலியார்**....ஓர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்
**பார்வதி அம்மாள்** ....கோமதியின் தாயார்

கோவிந்தசாமி முதலியார், சொக்கலிங்க முதலியார் முனிசாமி முதலியார் முதலியோர்.

**குறிப்பு:**—மேற்கண்ட பேர்களெல்லாம், எனது மற்ற நாடகங்களிலுள்ள பேர்களைப்போல புனைப்பெயர்களாம், ஒருவரையும் குறிப்பனவல்ல.

# இல்லறமும் துறவறமும்

## (ஓர் அங்க நாடகம்)

### முதல் காட்சி

*அடையாறில் சாந்தி ஆஸ்ரம அறையின் நடுசுவரில், ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு, கீதை உபதேசம் செய்யும் பெரிய படம் தொங்கவிடப்பட்டிருக்கிறது. அதற்கு வலதுபுறம் மகாத்மா காந்தியின் படமும் இருக்கின்றது.*

காலம்—பகல்

*கீதானந்த சுவாமிகள் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். ஆனந்தன் வருகிறான்.*

ஆ. ஸ்வாமிஜி நமஸ்காரம் (சாஷ்டாங்கமாய்நமஸ்கரிக்கிறான்

கீ. வா அப்பா ஆனந்தா, என்ன விசேஷம் திடீரென்று வந்தது?—கீதையில் மறுபடியும் ஏதாவது சந்தேகம் பிறந்ததா?

ஆ. இல்லை ஸ்வாமி, என்வாழ்க்கையில் ஒரு தர்மசங்கடமான சந்தர்ப்பம் வந்திருக்கிறது, அதனின்றும் தப்பி நான் எப்படி சரியாக நடப்பது என்பதைத் தாங்கள்தான் கூறவேண்டும். தங்களையன்றி எனக்கு தக்க புத்திமதி கூறுபவர் தரணியில் யாருமில்லை. ஆகவே தங்களுக்கு சிரமம் கொடுக்க வந்தேன்.

கீ. அப்பா ஆனந்தா, உன்னாலும் விடுவித்துக்கொள்ள முடியாத அப்படிப்பட்ட தர்மசங்கடம் என்னவோ சொல்; என்னால் முடியுமானால் அதற்குப் பரிகாரம் கூறுகிறேன்.

ஆ. ஸ்வாமிஜி, நான் பிறந்து வளர்ந்த பூர்வோத்திரம் உங்களுக்கு முன்பே தெரிவித்திருக்கிறேன். என் சிறு வயதில் என்னைப் பெற்ற தாய் தந்தையர் மடிந்தது முதல் என்னை வளர்த்து என்னை இதுவரையில் பி. ஏ. பட்டம் பெறும்படியாகச் செய்த என் சிற்றப்பாவிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது.

கீ. ஆம், நேற்றைத்தினம்தான் நீ பி. ஏ. பரீட்சையில் முதலாகத் தேறினதாகக் கேள்விப் பட்டேன் நேற்று காலை

பகவத்கீதை கேட்கவந்த ஒரு பிள்ளையாண்டானிட மிருந்து. மிகவும் சந்தோஷம்.

ஆ. அது சந்தோஷம் தான் ஸ்வாமிஜி, அந்த சந்தோஷ சமாசாரத்தினுல்தான் தர்மசங்கடத்திற்கு ஆளாயிருக் கிறேன்.

கீ. அதெப்படி? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை, சற்று விளங்கச்சொல்.

ஆ. இதோ, என் சிற்றப்பாவிடமிருந்து வந்த கடிதத்தைப் படிக்கிறேன். அதனுல் உமக்கு எல்லாம் விளக்கமாகும் (படிக்கிருன்) —"சிரஞ்சீவி ஆனந்தனுக்கு சுவாமியின் கிருபையால் எல்லா நன்மைகளும் உண்டாவதாக! நீ பி. ஏ. வெகு கீர்த்தியுடன் தேறினதைப் பற்றி கேள்விப் பட்டு மிகவும் சந்தோஷப்பட்டேன். ஒரு விஷயத்தைப் பற்றி நீ எப்பொழுது இவ்வாறுதேறப்போகிருய்என்று காத்துக்கொண்டிருந்தேன். அந்தவிஷயம் உன்னு டைய விவாகத்தைப் பற்றியேதான். உன்னுடைய மூன் ரும் வயதில் நேரிட்ட ரெயில் விபத்தினுல் உன்னுடைய தாய் தந்தையர் மடிந்த விஷயத்தைப் பற்றி முன்பே உனக்குக் கூறியிருக்கிறேன் அல்லவா? உன் தாய் தந் தையர் ஆஸ்பத்திரியில் உயிர் போகுமுன் என்னை வர வழைத்து என்னிடமிருந்து ஒரு பிரமாணம் வாங்கிக் கொண்டார்கள். அது என்னவென்ருல் உன் தாயா ரின் தம்பியாகிய முகுந்தராயருடைய அப்பொழுது தான் ஆஸ்பத்திரியில் பிறந்த பெண் குழந்தையை உனக்கு மணம் செய்விக்க வேண்டுமென்பதாகும். இவ் விஷயத்தைப்பற்றி உன் காலேஜ் படிப்பெல்லாம் முடியும் வரையில் உனக்குத் தெரிவிக்கலாகாது என்றி ருந்தேன். இன்றைத்தினம் உன் தாய் மாமனிடமிருந்து அவரும் உன் தாய் தந்தையர்க்கு வாக்கு கொடுத்த படி வயதுவந்திருக்கும் தன் பெண்ணை உனக்குக் கல்யா ணம் பண்ணிக்கொடுக்க விரும்புவதாக எழுதியிருக் கிருர். ஆகவே உடனே திருச்சிராப்பள்ளி வந்து சேர வேண்டும்"—என்றும் எழுதியிருக்கிருர்

கீ. அப்பா இதிலென்ன சங்கடம்? சந்தோஷமாய் ஒப்புக் கொள்ள வேண்டிய காரியமல்லவோ இது!

ஆ. ஸ்வாமிஜி, தயவு செய்து கொஞ்சம் பொறுக்கவேண் டும். ஒரு பாதியைச் சொல்லி முடித்தேன் மற்ருெரு பாதியையும் கேட்கவேண்டும்.

ஸ்ரீ. மன்னிப்பு, நான் அவசரப்பட்டது தவறு; மற்றொரு பாதியைச் சொல்.

ஆ. இந்தக் காயிதம் வருவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக நான் வேறொரு பெண்மணியை மணம் செய்துக் கொள்வதாகப் பிரமாணம் செய்துக் கொடுத்திருக்கிறேன். அந்த விவரத்தையும் சொல்கிறேன், கேளுங்கள், சுமார் ஆறுமாதத்திற்கு முன்பாக சென்னையில் நடந்த மேஜைப் பந்து பந்தயபோட்டி ஒன்றின் கடைசிபோட்டியில் நான் அப்பெண்மணியை எதிர்த்து ஆட வேண்டியதாயிற்று. அவள் ஜெயித்தாள். நான் தோற்றேன். அச்சமயம் அவளது புத்திக் கூர்மையையும் அழகையும் வியந்தேன். அவ்வளவு தான், பிறகு போனவாரம் திருஒற்றியூரில் நடந்த மகிழடி சேர்வை உச்சவத்தில் அகஸ்மாத்தாய் அவளை சந்தித்தேன். சுருக்கிச் சொல்லுமிடத்தில் நான் அவள் மீது காதல் கொண்டிருப்பதாகத் தெரிவித்து அவளை மணக்க விரும்புவதாகக் கோரினேன். அவளும் தான் என்மீது காதல் கொண்டிருப்பதாகத் தெரிவித்து அதற்கு அவளும் இசைந்தாள். பிறகு மகிழமரத் தடியில் நாங்கள் இந்த ஜென்மத்தில் ஒருவரை விட்டு ஒருவர் பிரிவதில்லை என்று பிரமாணம் செய்து கொண்டோம்.—இப்பொழுது சொல்லுங்கள் நான் யாரை மணப்பது நியாயம்.—

ஸ்ரீ. என்ன தர்மசங்கடம் இதை நீ தர்மசங்கடம் என்று கூறியது சரிதான்.

ஆ. ஸ்வாமிஜீ, தாங்கள்தான் இதனின்றும் என்னை விடுவித்துக் கொள்ளும் வழியினை எனக்குக் காட்டி அருள வேண்டும்.

ஸ்ரீ. (சற்று நேரம் தியானத்திலிருந்து) அப்பா புத்திசாலியாகிய நீ இதைப் பற்றி இதுவரையில் எப்படியும் யோசித்திருப்பாய் அல்லவா? உனக்கு ஒரு வழியும் தோன்றவில்லையா?

ஆ. ஸ்வாமி நேற்றிரவெல்லாம் கண் விழித்து பலவிதமாக யோசனை செய்தும் எனக்கு எந்த மார்க்கமும் சரியானதாகத் தோன்றவில்லை.

ஸ்ரீ. பகவத்சித்தம், அப்பா நீ இதுவரையில் பகவத்கீதையை நன்றாய்ப் படித்திருக்கின்றாய். அதைக் கொண்டு இந்தக்

கேள்விக்கு பதில் நீயே தேடிப்பார்; நீ செய்யவேண்டிய கடமை உனக்கு புலப்படும்.

ஆ. ஸ்வாமி, அப்படி எண்ணியே பகவத் கீதையை மறுபடியும் முற்றிலும் வாசித்துப் பார்த்தேன். எனக்கு திருப்திகரமான வழியொன்றும் புலப்படவில்லை.

கீ. ஏன் அப்படி?

ஆ. பகவத்கீதை என்ன சொல்லுகிறது? ஒவ்வொரு மனிதனும் எந்த சந்தர்ப்பத்திலும் தன் கடமைப்படி செய்யவேண்டும். அதனால் என்ன நேர்ந்த போதிலும் வரும் பலனைப் பற்றிக் கருதலாகாது.—இந்த சந்தர்ப்பத்தில் என் கடமை ஒரே வழியைக் காட்டினால் அதன்படியே வரும்பலனை கருதாது க்ஷணமும் தாமதியாது தீர்மானித்திருப்பேனே, என் கடமை, ஒரு புறம் நான் அறிவறிந்த நாளாக தன் மகனைப்போல் வளர்த்து வந்த என் சிற்றப்பாவின் பிரமாணத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்கிறது, மற்றொரு புறம் நான் சுவர்ணபாயிக்கு அதுதான் அப்பெண் மணியின் பெயர்—நான் கூறிய பிரமாணம் தவறலாகாது என்று வலிக்கிறது. இந்த இரண்டுக்கும் நடுவே நான் தவிக்கின்றேன். இந்த இரண்டு கடமைகளும் நியாயமானவைதான். ஆயினும் இவ்விரண்டில் ஒன்றைத்தானே நான் செய்து முடிக்கக் கூடும். நான் எதைச் செய்வதென்று தாங்கள்தான் தீர்மானமாகக் கூற வேண்டும்.

"சந்தேக ஆத்மாவினஸ்யதி" என்றபடி நான் சந்தேகத்தில் அழியாமல்

கீ. அப்பா நீ கூறியது மிகவும் சரி, இதற்குப் பரிகாரமாக ஒரு சிறு கதை மஹாபாரதத்தினின்றும் எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது.

ஆ. என்ன பரிகாரம் ஸ்வாமிஜி.

கீ. மஹா பாரதத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் தர்மராஜா இவ்வாறு கூறுகிறார் —"மனிதன் சன்மார்க்கத்தில் எப்படி நடப்பது? வேதத்தைப் பிரமாணமாகக்கொண்டு நடப்பதென்றாலோ வேதங்கள் நான்கு விதமாக இருக்கின்றன, புராணங்களோ பதினெட்டாயிருக்கின்றன, பல்வேறு ஸ்மிருதிகள் பலவிதமாகக் கூறுகின்றன,

கேவலம் மனிதன் எதன்படி நடப்பது? என் சிற்றறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்க்கும்போது — நன்மையோ — தீமையோ — நம்முடைய முன்னோர்களாகிய பெரியோர் காட்டிய வழியே நடப்பதுதான் சரி என்று தோற்றுகிறது" என்று கூறியுள்ளார்.

ஆ. இதற்குமுன் இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அகப்பட்டு வழிகாட்டிய பெரியார் எனக்கு ஒருவரும் ஞாபகமில்லையே.

கீ. நீ படித்திருக்கிறாய், இப்பொழுது ஞாபகமில்லை போலும். ராமாயணத்தில் ஸ்ரீ. ராமர் பதினான்கு வருடம் எல்லா சுகங்களையும் துறந்து வனவாசியாக வேண்டுமென்று தன் பிதாவின் கட்டளை என்று கேட்டபோது, தான் அக்கினி சாக்ஷியாக சீதையை மணந்தபோது அவளை விட்டு ஒருநாளும் பிரிவதில்லை என்று தான் செய்து கொடுத்த பிரமாணத்தினின்றும் தவறினாலும் தவறலாம் பிதுர் வாக்கிய பரிபாலனம்தான் தனது முக்கிய கடமை என்று தீர்மானித்து சீதையிடம் போய் பதினான்கு வருடம் அரண்யவாசம் செய்ய விடைபெறச் சென்றதை யோசித்துப்பார். வால்மீகி ராமாயணத்தில் உலகில் உத்தம புருஷன் யார் என்கிற கேள்விக்குப் பதிலாக ஸ்ரீ ராமரை ஆதியோடந்தமாக வர்ணித்திருக்கிறார் அன்றோ!

ஆ. ஆகவே நீங்கள் சொல்வதென்னவென்றால் என்னை வளர்த்த சிற்றப்பாவின் கட்டளைப்படி நடக்க வேண்டுமென்கிறீர்?

கீ. அன்றியும் நீயே கடிதத்தில் வாசித்தபடி உன் பெற்றோர்களின் கட்டளையும் இருக்கிறது.

ஆ. ஒரு குரூபியான பெண்ணை நான் மணக்க வேண்டுமென்றிருந்தால்?

கீ. உன் மாமாவின் பெண் குரூபியா? நீ எப்பொழுது பார்த்திருக்கிறாய்?

ஆ. நான் பல வருடங்களுக்கு முன் அவள் குழந்தையாயிருந்த போது பார்த்தது. அவளுக்கு வயது வந்தவுடன் நான் பார்க்கவில்லை. ராஜாக்களாகிய எங்கள் குல வழக்கம் வயது வந்த பெண்ணை ஆடவர் பார்க்க விடமாட்டார்கள். கணவனும் கூட கல்யாணம் செய்து

கொண்ட ஒரு கன்னியின் முகத்தை அன்றிரவு சய னக் கிரகத்தில்தான் காணக் கூடும்.

கீ. அப்படியாயின் ஒரு வேளை அப்பெண் நீ விரும்பி யிருக்கும் பெண்ணைவிட அழகாய் இருந்தாலோ?

ஆ. அது ஒருகாலும் இருக்க முடியாது. என் காதலியை விட அழகில் உயர்ந்த பெண்மணி இந்திர லோகங்களி லும் கிடைப்பதரிது. என் வார்த்தையை நம்பும்.

கீ. நானும் அப்படித்தான் நினைத்திருந்தேன் என் சிறு வயதில் — அதுவேறு கதையாகும் — உன் காதலியின் அழகைப் பற்றி மிகவும் புகழ்கிறாயே, அதெல்லாம் மேல் தோலைப் பொறுத்ததன்றோ, "மெய் போர்வை மாட்சித்து உடம்பு" என்று நீ படித்திருக்கிறாய் அல் லவா, அந்த அழகும் வைசூரி முதலிய கொடிய வியா திகளால் ஒரு வாரத்தில் அழிந்து போகக் கூடு மல்லவா — அப்பா மேல் அழகைக் கண்டு ஆசைப் படாதே. இல்லறத்தை விரும்பும் ஒவ்வொரு ஆடவனும் பெண்ணின் குணத்தையே முதன்மையாகக் கருத வேண்டும்.

ஆ. என் மாமன் மகளின் குணத்தை மாத்திரம் அறிந்தவனா இப்பொழுது!

கீ. இது ஒரு நியாயமான கேள்வி. உன் சிற்றப்பா மிகுந்த புத்திசாலி. உலக அனுபவம் உடையவர் என்று நீயே பன்முறை கூறி யிருக்கின்றாய், நானும் அப்படியே எண்ணுகிறேன் — அப்படிப்பட்டவர் — உன்னை இது வரையில் எவ்வளவோ கஷ்டப்பட்டு வளர்த்து கல்வி கேள்விகளில் உன்னைத் தேர்ச்சி பெறச் செய்த அவர் இவ்விஷயத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்திருக்க மாட்டாரா?

ஆ. அவர் அறியாதபடி அவள் குணவதியாய் அல்லாது கெட்ட நடத்தை உடையவளா யிருந்தாலோ?

கீ. நீ அறியாதபடி கல்லூரியில் வாசித்து வரும் உன் காதலி நீ அறியாதபடி குணவதியாய் இல்லாமல் போனாலோ?

ஆ. ஸ்வாமிஜி அதைப்பற்றிமாத்திரம் எனக்குச் சந்தேகமே இல்லை. 'அகத்தின் அழகு முகத்திலே' என்றபடி குணவதிதான் என்று உறுதியாய்க் கூறுவேன்

நான் இரண்டு முறைதான் பார்த்துப்பேசியிருக்கிறேன் என்பது உண்மையே. ஆயினும் இதைக் கொண்டு அவள் குணத்தை நான் மதிப்பது தவருகாது என்று நான் உறுதியாய் நம்புகிறேன்.

சீ. அப்பா, நான் சொல்வதற்காக நீ கோபித்துக் கொள் ளக் கூடாது. இப்படி வெறும் அழகைக் கண்டு விவா கம் செய்து கொண்டவர்கள் எத்தனையோ பேர் நம்மு டைய தேசத்திலேயே மோசம் போயிருக்கிருர்கள். ஐரோப்பா, அமெரிக்கா தேசத்திலுள்ள ஆடவர் பல நாள் பழகிய பின்னர் கல்யாணம் செய்து கொண்ட போதிலும் பிறகு மோசம் போயிருக்கிருர்கள் அவர் கள் மனைவிகளின் மன நிலை அறியாதவர்களாய்—அத் தேசங்களில் எத்தனை தம்பதிகள் சிறிது காலத்திற் கெல்லாம் மனம் ஒவ்வாது பிரிந்தவர்களாய் ஒவ்வொ ருவரும் வேறு மணத்தை நாடி இருக்கின்றனர் என்கிற கணக்கினை ஆராய்ந்து பார். என் அனுபோகப்படி இந்துக்களாகிய நமக்கு நமது பெற்ருேர்கள் ஆராய்ந்து பார்த்து செய்விக்கும் மணமே மேலானது. அவர்கள் செய்விக்கும் மணம் எல்லாம் சரியாக முடிகிறது என்று நான் கூறவில்லை. ஆயினும் மற்ற தேசங் களில் இருப்பதை விட நமது நாட்டில் தான் ஏறக் குறைய மனம் ஒத்து வாழ்ந்து இல்லறத்தை நடத்தும் தம்பதிகள் அதிகம் என்று நிச்சயமாய் நம்புகிறேன். நான் உன்னைக் கட்டாயப் படுத்துகிறேன் என்று நீ நினைக்க வேண்டாம். நீயே யோசித்துப் பார். நான் கூறினது சரி என்று தோன்றிஞல் அதன்படி நட, சரியல்ல என்று தோன்றிஞல் உன் இஷ்டப்படி நட அப்பா, சற்று தியானித்து நீயே உன் அந்தராத் மாவைக் கேட்டுப்பார்.

ஆ. (சற்று கண் மூடி மௌனியாயிருந்து பிறகு கண் விழித்து) ஸ்வாமிஜி என் மாமன் மகளையே நான் மணப்பது சரியான மார்க்கம் என்று தோன்றுகிறது. இதனுல் என் பெற்ருேர்களுடைய கட்டளையையும் என்னை வளர்த்து வந்தவர் கட்டளையையும் என் குரு வாகிய தங்களுடைய கட்டளையையும் நிறைவேற்றி யவனுவேன் என்று தோற்றுகிறது.

சீ. அப்பா இதில் உன் மனதில் இன்னும் ஏதோ கஷ்டம் இருக்கிறதுபோல் காண்கிறது.

ஆ. ஆம், ஸ்வாமிஜி தங்களிடம் நான் ஒன்றும் ஒளியேன். என் மனதிலிருந்த பாரம் பெரும்பாலும் நீங்கியது. ஆயினும் ஒன்று மாத்திரம் என் மனதை வாட்டுகிறது.

கீ. அப்பா அதையும் சொல், என்னால் முடியுமானால் அதையும் குறைக்கப் பார்க்கிறேன்.

ஆ. வேறொன்றுமில்லை. நான் வேறொரு பெண்ணை மணக்கப் போகிறேன் என்று தெரிந்தால் சுவர்ணபாய் எவ்வளவு பெருந் துயரத்திற்கு ஆளாவாள் என்று கவலைப் படுகிறேன்.

கீ. ஆம் உண்மையே. அது கொஞ்ச காலத்தில் மாறிவிடும். என்ன காரணம் பற்றி தனக்குக் கூறிய பிரமாணத்தினின்றும் நீ தவறும்படி நேரிட்டது என்பதை அறிவாளாயின் அவளே உனக்கு உத்திரவு கொடுப்பாள்.

ஆ. என்ன ஸ்வாமி! அவளாகவா உத்திரவு கொடுப்பாள் என்கிறீர்?

கீ. ஆம் நீ கூறியபடி உண்மையில் உன் மீது காதல் கொண்ட உத்தமியாயும் குணவதியாயுமிருந்தால்?

ஆ. (பெருமூச்செறிந்து) பிறகு என்ன செய்வாள் தெரியுமோ? இந்த ஜன்மத்தில் தன் உயிரை விடுவாள்.

கீ. அப்படி செய்வாளாயின் மறு ஜன்மத்தில் உன்னை தன் கணவனாகப் பெறுவாள்.

ஆ. ஸ்வாமிஜி, அந்த ஆறுதலாவது எனக்குக் கொடுத்தீரே அவ்வளவு போதும் — நான் வருகிறேன். (கொஞ்ச தூரம் போய் திரும்பி வந்து) ஸ்வாமிஜி அவளைக் கொன்ற பாபம், என்னைத் தொடருமே — அதற்கு என்ன சொல்கிறீர்?

கீ. அப்பா எல்லாம் அறிந்த நீ இந்நிலையில் கொஞ்சம் மறந்திருக்கிறாய். பகவத் கீதையில் கடைசி அத்தியாயத்தில் கீதாச்சாரியார் கூறியதை மறவாதே.— "சர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ"— பரமாத்மாவையே சரணம் அடை — எல்லா பாரத்தையும் அவர் மீது போடு. அவர் வாக்களித்தபடி உன்னை எல்லா பாபங்களினின்றும் மீட்டு வைப்பார்—"மாசுச" வருந்தாதே.

**ஆ.** ஸ்வாமிஜி தாம் தான் எனக்கு பிரத்தியட்க்ஷமான கீதாச்சாரியார்—தன் யோஸ்மி அனுக்கிரகீ தோஸ்மி, விடை பெற்றுக் கொள்ளுகிறேன் தங்கள் ஆசீர்வாதம்.

**கீ.** போய் வாப்பா — "மாசுச" (ஆனந்தன் போகிறான்)

## இடைக் காட்சி (1)

இடம்—*வைதியலிங்க முதலியார் வீடு.*

*வைதியலிங்கமுதலியார்உட்கார்ந்திருக்கிறார். அவர் எதிரில்இருக்கும் மேஜையின் பேரில் ஒருபுகைப் படம் வைத்திருக்கிறது. பக்கச் சுவரில் இரண்டு ரோஜாப்பூ மாலைகள் தொங்க விடப்பட்டிருக் கின்றன. ஒரு வெல்வெட் அடித்த நாற்காலியும், இரண்டு மூன்று சாதாரண நாற்காலிகளும் மேஜையைச்சுற்றிலும்வைக்கப்பட்டிருக்கின்றன.*

*நாராயணசாமி முதலியார் வருகிறார்.*

**நா.** என்னுப்பேன் அவசரமாய் வரச்சொன்னையாமே? என்ன சமாசாரம்.

**வை.** வாங்க உட்காருங்கொ—நம்ப குருபாதத்துக்கு புத்தி வரும்படிசெய்ய, நான் ஒரு யுத்தி செய்திருக்கிறேன். அதுக்கு உங்க உதவியும் கொஞ்சம் வேணும்.

**நா.** எந்த குருபாதம்? நம்ப பக்கத்தெருவில் இருக்கிறானே அவன் தானே? போன மாசம் நிச்சையதார்த்தம் எல்லாம் ஆன பிறகு கல்யாணப் பெண் கருப்பாயிருக் கிறாள் எனக்கு வேணும் என்று சொல்லி கல்யாணத்தை நிறுத்தி விட்டானே—அவனு?

**வை.** ஆமாம், அவன் தான், அவன் இப்பொ என்னா சொல்லி கினு திரிகிறான்னு—"எனக்கு யாரானாலும் பொண்ணு கொடுக்கிறதாயிருந்தா அந்தப் பொண்ணு ரொம்ப அழ காயிருக்கணும், எனக்கு ரொக்கமாய் முப்பதினாயிரம் கொடுக்கணும், பி. ஏ. பாஸ் பண்ணவளாயிருக்கணும் இல்லாப்போனு நான் கட்டிக்கமாட்டே" - இன்னிக்கினு யிருக்கிறான். அவனுக்கு நன்னா புத்தி வரும்படி செய்ய ணும் இண்ணு ஒரு யோசனை செய்திருக்கிறேன்.

**நா.** செய்ய வேண்டியதுதான் அந்தப் பொண்ணுக்கு அப் பென் எனக்கு ரொம்ப சிநேகிதம் அப்பா, பாவம்

என்ன துக்கப்பட்டாம்பா—பொண்ணு என்னமோ மாநிறம்தான் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் பண்ணியிருகிறு, "என் கையிலே ஆயிரம் ரூபாய்தான் இருக்குதப்பா அதுக்குமேல் கொடுக்கமுடியாது—நிச்சையதார்த்தம் ஆன பிற்பாடு கல்யாணம் நின்னு போறதின்னு எனக்கு ரொம்ப அவமானமாயிருக்குது" இன்னு எவ்வளவோ கெஞ்சிப்பார்த்தான். இந்த மடையன் ஒரே பிடிவாதமா மாட்டேன்னுட்டான், அவனுக்கு புத்தி சொல்லி வைக்கவேண்டியது நியாயம்தான்—ஆமா, அதுக்கு என்ன யோசனை பண்ணிருக்கே?

**வை.** அவன் இங்கே வர நேரமாச்சி. சீக்கிரம் சொல்றேன் கேளுங்கள். எங்க அண்ணுத்தை பிள்ளே மாணிக்கவேலு அண்ணுமலே யூனிவர்சிட்டிலே, பி. ஏ. பாஸ் பண்ணிட்டு எம்.ஏ.க்கு படிச்சிகினு இருக்கிருன், அவன் அவுங்க காலேஜ் டிராமடிக் சொஸைட்டிலெ பொம்மனுட்டி வேஷம் போட்டு ஹீரோயினுக ஆக்ட் பண்ண போது, அந்த பெண் வேஷத்துடன் எடுத்த போட்டோ ஒன்றை எனக்கு அனுப்பினுன். இதோ இருக்குது பாருங்கோ அந்த படம் (மேஜையின் பேரிலிருக்கும் படத்தை எடுத்து அவர் கையில் கொடுக்கிருர்)

**நா.** (அதை உற்றுப்பார்த்து) ரொம்ப நண்ணுயிருக்குது அச்சம் பொம்மனுட்டியாட்டம் இருக்குதே?

**வை.** எனக்கும் அப்படிதான் பட்டது. இதைப்பார்த்தவுடன் எனக்கு நல்லயோசனே பிறந்தது. இரண்டு மூன்று தினங்களுக்கப்பறம் குருபாதத்தை வரவழைத்து இந்த பொண்ணுக்கு என்ன சொல்கிருய் என்றுகேட்டேன். அவனும் இந்த படத்தை பார்த்து ஏமாந்தவனுய் யார் இந்த பெண் ரொம்ப அழகாயிருக்கிருள் இவளை நான் கல்யாணம் பண்ணிக்க இஷ்டப்படுகிறேன—ஆயினும் இவளுக்கு ஏதாவது சொத்து இருக்குதா என்று கேட்டான் அதற்கு நான் அவள் போட்டுக்கொண்டிருக்கும் நகைகளே சுமார் ஐம்பதினுயிரம் ரூபாய் பொறுமே என்று சொல்லி—அவள் பி. ஏ. பாஸ் பண்ணிட்டு எம். ஏ. பரீட்சைக்காக படிப்பதாக தெரிவித்தேன்—அதன் பேரில் "இவள் தான் எனக்கு சரியான பெண், இவளை நான் கல்யாணம் செய்து கொள்ள தடையில்லே" என்று சொன்னுன்--அதற்கு நான் உனக்கு தடையில்லே சரிதான், அவள் ஒப்புக்கொள்ள வேண்டுமே

என்று கேட்டதற்கு, அவன் "அதையெல்லாம் நான் பார்த்துக்கொள்ளுகிறேன் அவளுடைய அட்ரெஸ்மாத திரம் எனக்கு கொடுங்கள். நான் நேராக எழுதி கேட்கிறேன்" என்றான். அதன் பேரில் அவன் பேர் மாணிக்க வேலு பி. ஏ. இருப்பிடம் நம்பர் 32 அண்ணாமலை யூனிவர்சிட்டி ஆஸ்டல் என்று தெரிவிக்க அதை மிகவும் ஜாக்கிரதையாய் தன் நோட் புத்தகத்தில் குறித்துக் கொண்டு"—"எப்படியாவது இந்தப் பெண்ணை நான் கல்யாணம் செய்து கொள்ள நீங்கள் ஒத்தாசை பண்ணவேண்டும்,, என்று என்னை கெஞ்சிக்கேட்டான் நான் என்னாலான ஒத்தாசை செய்ய தடையில்லை என்று பதில் சொல்ல அவன் வேகமாய் விடை பெற்றுக்கொண்டு வீட்டுக்குப்போனான். நான் அன்றே அவன் எழுதுவான் என்று தெரிந்தவனாய் உடனே மாணிக்கவேலுக்கு எல்லா சமாசாரங்களையும் கூறி "இந்த குருபாதம் உனக்கு எழுதுவான் அவனுக்கு நான் தக்க புத்தி சொல்ல வேண்டி ஒரு சூழ்ச்சி செய்ய போகிறேன் அதற்கு உன் உதவி முக்கியமாகவேண்டும். அதற்காக அவன் உனக்கு கடிதம் எழுதினால் நீ உண்மையைக் கூறாது நீயும் ஏதோ இசைவது போல் பதில் எழுது. பிறகு நடக்கவேண்டிய காரியங்களை அப்புறம் சொல்லுகிறேன்" என்று எழுதி அனுப்பினேன். நான் எண்ணியபடியே நடந்தது. போன வாரம் என்னிடம் வந்து குருபாதம் தன்னை மாணிக்கவேலு மணக்க ஒப்புக்கொண்டதாகவும் கல்யாணம் ஒரு காரணம் பற்றி ரெஜிஸ்டர்டு விவாகமாக இருக்கவேண்டுமென்றும் கோரியிருப்பதாயும் கூறி என் உதவியை நாடினான். நான் அதற்கு எனக்கு தடையில்லை நான் அப்பெண்ணை வரவழைத்து என் வீட்டிலேயே ரெஜிஸ்டார் முன்பாக ரெஜிஸ்டர்டு கல்யாணம் செய்து வைக்கிறேன் நீ பயப்படாதே என்று சொல்லி அனுப்பியிருக்கிறேன். அதற்காக இன்றையதினம் 11 மணிக்கு காலம் குறித்து எழுதி அனுப்பியிருக்கிறேன். அவன் வரும் நேரமாயிற்று மாணிக்கவேலுவை பெண் உடையில் அழைத்து வரும்படி என் தம்பிக்கு சொல்லி என் காரை அனுப்பியிருக்கிறேன் நீங்கள் தான் ரெஜிஸ்டார் என்று அவனுக்கு சொல்லுகிறேன். நீங்களும் ஆம் என்று சொல்லி அவர்கள் இருவருக்கும் ரெஜிஸ்டர்டு கல்யாணம் செய்து வைப்பது போல் செய்து வையுங்கள்.

நா  நல்ல வேடிக்கைதான் அவனுக்குத் தக்க புத்திமதியாகும். பிறகு உண்மை வெளியாயின் அவன் மிகவும் கோபம் கொள்ளமாட்டானு ?

வை  உண்மை உடனே வெளியாவதற்கு ஒரு சூழ்ச்சி ஏற்பாடு செய்திருக்கிறேன். அது வரையில் நீங்கள் சிரிக்காமல் இருக்கவேண்டும். உண்மை வெளியானவுடன் நிரம்ப கோபம் கொள்வான். வாஸ்தவம் அவன் கோபம் யாரை என்ன செய்யக்கூடும். நம் மீது என்ன குற்றம் சாற்றக்கூடும். அவன் வெட்கக்கேட்டைக் கேட்டால் எல்லோரும் நகைப்பார்களே ஒழிய வேறென்றுக்கும் இடமில்லை.

நா  நல்ல வேடிக்கை—நீர் கேட்டபடியே செய்கிறேன். பதிஞெரு மணி ஆகப்போகிறது. ஒரு பெரிய நோட்புக் ஒன்றையும் பவுண்டன் பேனு ஒன்றையும் என்னிடம் கொடு—நான் ரெஜிஸ்டார் வேஷம் போட்டால் அதற்குரிய சாமக்கிரியைகளெல்லாம் என்னிடம் இருக்க வேண்டாமா ?

வை  (அதன்படியே செய்து) அதோ ! அவன் வருகிற சப்தம் கேட்கிறது நீங்கள் ஒரு புறம் உட்கார்ந்திருங்கள்.

குருபாதம் வருகிருன்.

வை  வாங்க மாப்ளே-அஞ்சி நிமிஷம் முன்னேயே வந்துட்டா போல இருக்குது ?

கு  கலியாண பெண்ணு—வரலையோ ?

வை  நீங்கள் உட்காருங்கோ சரியா லக்ன பிரகாரம் வந்துடுவாள். என் தம்பி போட்டோகிராப்பரை அனுப்பியிருக்கிறேன். பொம்மனுட்டியாச்சே சிங்காரிச்சிகினு வரத்தாவலே.

கு  ஆமா, ஆமா—இவர் யார் தெரியலெ.

வை  இவர் ரெஜிஸ்டார் ஆபிசிலிருந்து வந்திருக்கிருர்—நான் சுய மரியாதைகாரன் இந்த பிராமண சடங்கெல்லாம் உதவாது என்னிங்களே.

கு  சரிதான்—ஏன் இன்னும் வரவில்லை.

வை  அவசரப் படாதீர்கள் அய்யா இன்னும் மூணு நிமிஷமிருக்கிறதே பதிஞெரு மணிக்கு — ஆமாம் — கேக்க மறந்துட்டேடே கல்யாணப் பெண்ணின் சாமுத்திரிகா

லக்ஷணம் எப்படியிருக்கிறது பார்த்தீர்களா, அந்த கலையில் நீங்கள் கைதேர்ந்தவர்களாச்சே.

கு அதையெல்லாம் முன்பே பார்த்தேன். இவள் மிகவும் கற்புடையவளா யிருப்பாள். புருஷனை ஒரு நாளும் மோசம் செய்யாள் என்று முகத்தின் குறிகள் இதை நன்ருய் தெரிவிக்கிறது.

வை மிகவும் சந்தோஷம்—அதோ கார் சத்தம். கல்யாண பெண் வந்து விட்டாள் நீங்கள் உட்காருங்கோ எழுந் திருக்காதீர்கள்.

ஏகாம்பரம் கல்யாண பெண் வேடம் தரித்த மாணிக்க வேலுவை அழைத்து வருகிருன். (கடியாரம் 11 மணி அடிக்கிறது.

வை நல்ல சகுனம், லக்னம் தவறிவிடப் போகிறது—ஐயா ரிஜிஸ்டார் உங்கள் வேலையை சீக்கிரம் முடியுங்கள்.

நா இதோ (புஸ்தகத்துடன் முன் வந்து) கல்யாண பிள்ளை யும் பெண்ணும் எதிரில் சற்றே நிற்க வேண்டும் (அவர்கள் அப்படியே செய்கின்றனர்.)

நா ஐயா உங்கள் பேர் என்ன ?

கு அமரம்பேடு குருபாத முதலியார்

நா அம்மா உன்பேர் என்ன

மா (மெல்லிய குரலுடன்) மாணிக்கவேலு.

நா (எழுதிக்கொண்டே) நீங்கள் எந்த ஜாதியைச் சேர்ந்த வர்கள் ?

கு நான் எந்த ஜாதியையும் சேர்ந்தவனல்ல — சுயமரியா தைக் காரன்.

நா அம்மா, நீங்கள் ?

மா நானும் சுயமரியாதைக்காரி

நா ஐயா இந்தப் பெண்ணை கல்யாணம் செய்துக் கொள்ள விரும்புகிறீர்களா ?

கு ஆமாம் சந்தேகமில்லாமல்

நா அம்மா, நீ கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிருயா?

மா ஆம்

நா சரி மிஸ்டர் வைதியலிங்கம் என் வேலை தீர்ந்துவிட்டது, இனி உங்கள் வேலை

வை சந்தோஷம் பெண்ணும், பிள்ளையும் மாலை மாத்திக் கொள்ளவேண்டியது. (மாலைகளை கொடுக்க அவர்கள் மாலை மாற்றிக் கொள்கின்றனர்)

வை மோதிரத்தையும் மாற்றிக் கொள்ளுங்கள். (அப்படியே செய்கின்றனர்)

நா கல்யாணம் முடிந்துவிட்டது என் புஸ்தகத்தில் இரண்டு பேர் சாட்சி போடணும்.

வை இதோ நானும் என் தம்பி ஏகாம்பரமும் சாட்சி போடு கிறோம். (அப்படியே செய்கிறார்கள்)

நா என்—பீஸ் 25 ரூபாய்

கு இதோ (மூன்று பத்து ரூபாய் நோட்டுகளை கொடுக் கிறான்)

நா நான் வரலாமே இனி கங்கிராச்சு லெஷன்ஸ். மாப் பிளைவாள் நான் வருகிறேன்.

வை கொஞ்சம் பொறுங்கள். மணவிருந்து சாப்பிட்டுவிட்டு போங்கள்—அதற்கு முன் ஒரு சின்ன வேலை இருக் கிறது. அப்பா ஏகாம்பரம்—உன் காமிராவைக்கொண்டு வந்து இரண்டு பேரையும் படம் பிடி. இது தற்காலத் திய எல்லா கல்யாணங்களிலும் வழக்கமாச்சே—இது தவறலாமா.

ஏ இதோ (காமிராவைக்கொண்டு வந்து நிறுத்தி) மாப்ளே நீங்க இந்த வெல்வெட் நாற்காலியில் இப்படி உட்கா ருங்கள்—மாணிக்க வேலு—அட வேறே வெல்வெட் நாற்காலி இல்லையே—பரவாயில்லெ நீ மாப்பிள்ளை நாற்காலியின் —பின்னல் நில்லம்மா கொஞ்சம் ஒரு பக்கமாக உன் கையை மாப்பிள்ளையின் தோளின் மேல் வைத்துக்கொள். இது நமது இந்தியர்கள் சம்பிர தாயம். (அவர்கள் அப்படியே செய்கின்றனர்.)

ஏ அப்படியே அசையாமலிருங்கள். நேராக காமிராவின் லென்ஸை பார்த்துக்கொண்டு (காமிராவண்டை போய் அதை போக்கஸ் செய்கிறார்) இரண்டு நிமிஷம் அசையாதிருங்கள் வீட்டிற்குள் படம் பிடிக்கிறபடி யால் எக்ஸ் போஷர் கொஞ்சம் அதிகமாய் இருக்க வேண்டியிருக்கிறது(ஏகாம்பரம் காமிராவின் லென்சை திறக்கிறார்) ஸ்டெடி இரண்டு நிமிஷம் (இச்சமயம்

வைத்தியலிங்க முதலியார் மாணிக்கவேலுவின் தலை சாமான்கள் அணிந்த ஜடை போட்டிருக்கும் டோப்பாவை மெள்ள எடுத்து விடுகிறார்)

ஏ பாதி வேலை தீர்ந்தது. மாப்ளே நீங்கள் நில்லுங்கள். கல்யாண பெண் உட்காரட்டும். அப்படி ஒரு படம் பிடிக்கிறேன்.

கு (எழுந்திருந்து திரும்பிப் பார்த்து) என்ன இது!—யார் இது—ஆண் பிள்ளையா?—(மற்றெல்லோரும் உரக்க சிரிக்கிறார்கள்) என்னை இப்படியா மோசம் செய்தாய், மாணிக்கவேலு?

வை நீ தான் சொன்னையே அப்பா, இந்த பெண் ஒருவரையும் மோசம் செய்யமாட்டாள் என்று—நீதான் சாமுத்திரிகா லட்க்ஷணம் தெரிந்த சாஸ்திரியாச்சே (குருபாதம் தவிர மற்றெல்லோரும் நகைக்கிறார்கள்)

கு உங்களை யெல்லாம் என்ன செய்கிறேன் பாருங்கள்! (கோபத்துடன் வேகமாய் வெளியே போகிறான்).

வை அவனுக்குத் தக்க தண்டனை இதுதான்!

## இடைக் காட்சி (2)

இடம்:—திரிச்சினப்பள்ளியில் உறையூர் வீதியில் ஓர் வீட்டில் ஓர் அறையில்

காலம்:—பகல்

வீராயி சுவரில் மாட்டியிருக்கும் சில படங்களை துடைத்துக் கொண்டிருக்கிறாள்.

தெருக்கதவைத் தட்டுகிற சப்தம்.

வீ அதோ இன்னொருத்தர்—காலமே எழுந்து கதவே தட்ரவர்களுக்கு ஜவாப் சொல்வதே பெரிய வேலையா போச்சு (கதவண்டை போய் திறக்கிறாள்)
(குருபாதமும் பத்மநாபனும் உள்ளே வருகிறார்கள்)

வீ யாரய்யா நீங்க?

கு இந்த வீட்டுக்காரம்மாளை பார்க்க வந்திருக்கிறோம்—இதுதானே மிஸ் ஜெகன் மோகினி இருக்கிற வீடு?

வீ யாரு?

கு மிஸ் ஜெகன் மோகினி அம்மாள்.

வீ அது யார் அது? அந்த பேர் கொண்டவங்க இந்த வூட்டிலே யாருமில்லே போங்கோ.

ப ஏம்பா நான் அப்பவே சொன்னெம்பா, நீ மேல் விலாசம் எல்லா சரியா கேட்டுகினு வரணும்.

கு நான் தான் சரியா கேட்டுகினு வந்தேனே அந்த நாடக முதலாளிதான் சொன்னாரே இந்த தெருவுலே பிள்ளை யார் கோவிலுக்கு எதிர்த்த வீடு இன்னு—சந்தேக மில்லே அதோ பார் செவுத்துலே ஜெகன் மோகினி படம்—அம்மா இந்த படத்திலிருக்கிறார்களே அந்தம்மா இந்த ஊட்டிலிருக்கிறார்களோ?

வீ இல்லே.

கு இந்த ஊட்டுகாரம்மா பேரென்ன?

வீ பேச்சி முத்து அம்மா

ப நான் அப்பவே சொன்னனே இந்த வூடாயிருக்கா தப்பா. (உள்ளே இருந்து குரல் வீராயி)

வீ இதோ வந்துட்டேனம்மா (இரண்டாம் கட்டுக்குள் போகிறாள்)

உள்ளே இருந்து குழந்தை அங்குமுத்து வருகிறது

கு சந்தேகமில்லே இந்த ஊடுதான் இந்த கொழந்தை கூட நேற்று பட்டாபிஷேக நாடகத்திலே டான்ஸ் பண்ணுச்சே.

அ ஆமாம் நான் டான்ஸ் பண்ணினேன்.

கு பாப்பா, மிஸ் ஜெகன் மோகினி அம்மா இந்த ஊட்லே தானே இருக்கிறாங்க

அ எனக்கு தெரியாது. எங்க அம்மாளே கேட்டுப்பாருங்க

கு உங்க அம்மாளையா?

அ ஆமா அதோ, வராங்கோ.

(ஜெவந்தி அம்மாள் வருகிறாள்)

ஜெ யார் அய்யா அது உங்களுக்கு என்ன வேணும்.

கு மிஸ் ஜெகன் மோகினியை பார்க்கணும். அவுங்க இந்த வூட்டிலேதான் இருக்கிறதாக சொன்னாங்கோ.

ஜெ (சிரித்துக் கொண்டே) ஓ, எங்க அம்மாளையா அவுங்க குளிச்சிகினு இருக்கிறுங்கோ. சீக்கிரம் வந்து விடு வாங்கோ.

கு ஏம்மா, நீங்ககூட நேத்து நாடகத்திலே நடிக்கலே.

ஜெ ஆம், நான் பால ப்ராட்டா வந்தேன்.

கு மிஸ் ஜெகன் மோகினி அம்மா உங்களுக்கு என்ன வேணும்.

ஜெ எங்க தாயார்?

ப ஹாம்:—

ஜெ அவுங்களையா பாக்க வந்தீங்க. இதோ நான் போய் சீக்கிரம் வரச்சொல்றேன். கொஞ்சம் இந்த பெஞ்சில் உட்கார்ந்திருங்கோ. (அங்கமுத்துவை அழைத்துக் கொண்டு உள்ளே போகிறுள்)

ப (ஒரு புறமாக) ஏண்டாப்பா பாட்டியே கட்டிக்கவா ஆசைபட்டே.

கு (ஒரு புறமாக அவனுக்கு) இல்லேடா அவ பதினறு, பதினேழு வயசு பெண்ணுட்டமா இருந்தா. சிகப்பா என்ன அழகாயிருந்தாள் இந்த படத்திலிருப்பது போல.

ப எல்லாம் மேகப்பா இருக்கும்—நான் சொல்றத்தே கேளு. உன் ரம்பை வரத்துக்குள்ளே நம்பொ பேசாதே டிம்கி குடிக்கலாம்.

கு அது நண்ணுயிருக்காது பத்மநாபம்— நேரா பார்த்துட்டுதான் போவோமே.
பேச்சிமுத்து ஒத்தை வஸ்திரம் அணிந்து உள்ளே இருந்து வருகிறுள்.

பே யார் அது — யாரைப் பார்க்க வந்தீங்க.

கு பேச்சி — முத்து -- அம்மாளை.

பே (சிரித்துக் கொண்டே) நான் தான் பேச்சி முத்து. இதோ வந்துட்டேன் ஒரு நிமிஷமிருங்கோ (உள்ளே போகிறுள்)

ப் ஏண்டாப்பா போயும் போயும் இந்த கருப்பாயி கெழவியா கல்யாணம் பண்ணிக்கனும்னு இஷ்டப்பட்டே? அவளுக்கு குறைந்த பட்சம் 45 வயதாவது இருக்கும். நல்ல ஜெகன் மோகினி.

கு இல்லேடா என்ன சிகப்பா யிருந்தா ஸ்டேஜிலே சின்ன பொண்ணாட்டம் ஆக்ட் பண்ணுறே.

ப அதெல்லாம் ஸ்டேஜ் மேகப் — ஏமாந்த சோணகிரி! பேச்சி முத்து நன்றாய் உடுத்திக்கொண்டு வருகிறாள்

பே உங்களே காக்க வைச்சதுக்காக மன்னிக்கணும்

கு அதனாலெ ஒண்ணு மில்லே—என்னை உங்களுக்கு தெரியுதோ?

பே நன்னா தெரியுது நீங்கதான் எங்க நாடக சபெ இந்த ஊருலே ஆட ஆரம்பிச்சமுதல் நேத்து பட்டாபிஷேக நாடகம் வரைக்கும் ஒண்ணு தப்பாதே எல்லா நாடகங்களையும் பார்க்க வந்திருந்தீங்களே — முதல் வகுப்பிலே முதல் வரிசையிலே உக்காந்துகிணு.

கு ஆமாம், அதைகூட கவனிச்சிங்களா நீங்க?

பே கவனிக்காமெ என்ன — நேத்து நாடகக் கடைசியிலே ஆக்டர்களுக்கெல்லாம் பிரஸன்டேஷன் கொடுத்த போது நீங்க எனக்கு ஒரு பொன் மோதிரம் கொடுத்திங்களே — இதோ அந்த மோதிரம் என் விரலில் இருக்குது பாருங்கள் (அதைக் காட்டுகிறாள்)

கு சந்தோஷம்.

பே ஏது நீங்க இவ்வளவு தூரம் என் வீட்டை தேடி வந்தது?

ப அவர் சொல்ல சங்கோசப்படுகிறார் உங்கபாட்டே இன்னும் கொஞ்சம் கேட்கணுமாம் தனியா — நாடக பாட்டுகள் அல்லா, ஜாவளி, பதம் இப்படிப்பட்ட சில்லரை பாட்டுங்களே.

பே அதுக்கு ஒண்ணும் தடையில்லே இன்னைக்கி என் புருஷன் திவசம் அத்தொட்டு பாட்டு ஒண்ணும் பாடரதில்லே இண்ணு ஒரு நியமம் வைத்திருக்கேன்.

ப அதுக்கென்ன இன்னொரு நாள் வந்து கேக்கறோம் — ஏம்பா குருபாதம் புறப்படலாமா?

கு ஹாஹா. (எழுந்திருக்கிறான்)

பே ஒரு நிமிஷம் — இன்னெ ரெயிலே எங்க கம்பெனியோடே நானும் புறப்பட்டு சாயங்காலம் போறேன் சென்னைப் பட்டினத்துக்கு — அங்கே நாடகமாட

ப  சரி சென்னை பட்டினத்துக்கு போயி நீங்க இருக்கிற இடம் விசாரிச்சிகினு அங்கே வந்து கேக்கரோம் — நாங்க வரோம்.

பே  இதோ தாம்பூலம் வாங்கிகினு போங்க (உள்ளே போகிறாள்)

ப  ஏம்பா இந்தம்மா விடோ தானே! நீ கல்யாணம் பண்ணிக்கலாமே — அப்போ உன் பெண்சாதியே மிஸ் ஜெகன் மோகினி இன்னு கூப்பிடுவையா? இல்லா போனா பேச்சி முத்துண்ணு கூப்பிடுவையா?

ஜ  அடெ சும்மாயிருப்பா — நீயும் கொட்டிக்காதே என் வயித் தெரிச்சலெ.
(பேச்சி முத்தம்மாள் வந்து இருவருக்கும் தாம்பூலம் கொடுக்கிறாள்)

பே  ஞாபக மிருக்கணும்.

ப  அதுக்கென்ன! அவர் உங்களை மறக்கமாட்டார் அம்மா — நாங்க வரோம் (இருவரும் வெளியே போகிறார்கள்)

பே  பாவம்! — சின்ன வயசு இவரும் ஏமாந்தா போலிருக்கிறது — ஐயோ பாவம்.

காட்சி முடிகிறது

## இரண்டாம் காட்சி.

அதே இடம் :—கீதானந்தர் மான்தோல் ஆசனத்தின்மீது உட்கார்ந்து பகவத் கீதையை தனக்குள் படித்துக் கொண்டிருக்கிறார் நமசிவாயம் வருகிறான்.

ந  சாமிஜி வந்தவங்களெல்லாம் பூட்டாங்க, ஒரு மொம்மனாட்டி மாத்திரம் நின்னுக்கினு இருக்கிறாங்கே வெளியிலே.

கீ  ஏன் நிற்கிறார்கள்?

ந  உள்ளே வரலாமாஇண்ணு கேட்டுவர சொன்னாங்கோ.

கீ  ஆட்சேபனை இல்லை வரச்சொல்

ந  அவுங்க ரொம்ப அழகாயிருக்காங்கோ.

ஸ்ரீ துஷ்டப்பயலே அதை உன்னை யாரடா கேட்டது—போய் அழைத்துக்கொண்டு வா—ஸ்திரீகள் யாராவது என்னை பார்க்கவந்தால் நீ செய்யவேண்டிய கடமை உனக்கு சொல்லியிருக்கிறேன் அல்லவா?

ந ஆமாம் சாமி, அவுங்க பக்கத்திலேயே நான் நிக்கணும்.

ஸ்ரீ சீக்கிரம்போய் அழைத்துவா ஏன் அவர்கள் வெளியில் வெகுநேரம் நிற்கவேண்டும்? (நவசிவாயம் போகிறான்)

ஸ்ரீ யார் என்னைப்பார்க்க இந்த வெய்யிலில் வந்திருப்பது? (நமசிவாயம் முக்காடிட்ட சுவர்ணாபாயை அழைத்து வருகிறான்)

ந அதோ அவர்தான் சாமிஜி.

சு ஸ்வாமிஜி நமஸ்காரம்.

ஸ்ரீ நமஸ்காரம் வாம்மா அந்த ஆசனத்தில் உட்கார் என்ன சமாசாரம் நீ என்னை நாடிவந்தது?

சு நீங்கள் மன சஞ்சலத்தை அடைந்திருப்பவர்க்கெல்லாம் தக்க புத்திமதி கூறி அவர்கள் நடக்கவேண்டிய மார்க்கத்தைத் தெரிவிக்கும்படியான மகாத்மா என்று கேள்விப்பட்டு, என்—என் சிநேகிதை ஒருத்தி இன்று உம்மை ஒரு கேள்வி கேட்டு வரும்படியாக அனுப்பினாள் அதைக் கேட்க வந்தேன்.

ஸ்ரீ தாராளமாய்க் கேள் அம்மா, ஏன் சங்கோசப்படுகிறாய்? என்னை உன் பாட்டனாராக எண்ணிக்கொள்.

சு அந்த கேள்வி ஈதாகும், பெண்ணாய் பிறந்த ஒருத்தி மணம் செய்துகொள்வதில் தன் மனம் சென்றபடி நடப்பதா, அல்லது தன் பெற்றோர்களின் கட்டளைப்படி நடப்பதா எது உசிதம்? இதற்கு பதில் கேட்டுவரச் சொன்னாள் என் சிநேகிதை.

ஸ்ரீ (சிரித்துக்கொண்டே) பழங்கதை—ஆச்சரியம்!—அப்பா நமசிவாயம் சற்று தூரத்தில்—அதோ அந்த மூலையில் போய் உட்கார். (நமசிவாயம் அப்படியே செய்கிறான்)

ஸ்ரீ அம்மா என்னிடம் நேராக கேட்க சங்கோசப்படுகிறாய் போலிருக்கிறது. உன் மனதிலிருக்கும் சங்கடத்தை நான் உன் பாட்டனார் என்று எண்ணி என்னிடம் சங்கோசமின்றி கேள்.

சு ஸ்வாமிஜீ என்னை மன்னிக்கவேண்டும் நேராககேட்க வெட்கப்பட்டு இப்படிக் கேட்டேன். என் சங்கடத்தை சொல்கிறேன்என்னை பெற்றோர்கள் திரிச்சிராப்பள்ளி வாசிகள். கொஞ்சம் செல்வந்தர்கள்தான், அவர் களுக்கு நான் ஒரே பெண் என்னை மிகவும் அன்புடன் வளர்த்து நான் பி. ஏ. பரீட்சை படிக்கும்படியாக அனுமதி கொடுத்து ஒரு வேலைக்காரியுடன் பட்டணத் திற்கு அனுப்பினார்கள். இங்கு நான் எத்திராஜ பெண் கல்லூரியில் படித்து வருகிறேன். சில தினங் களுக்கு முன்பாக நான் மணம் செய்துகொள்ள விரும்பிய ஓர் உத்தமனுக்கு அவரையே மணம் புரிவ தாக வாக்கு கொடுத்துவிட்டேன். அதன் பிறகு என் பெற்றோர்களிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக் கிறது. அதில் என்னை தங்கள் பந்து ஒருவனுக்கு என்னை மணம் செய்துகொடுக்க தீர்மானித்திருப்பதா யும் நான் உடனே விவாகத்துக்காக திரிச்சிராப்பள்ளி வந்து சேரவேண்டுமென்றும்—எழுதியிருக்கிறார்கள்.

ஸ்ரீ என்ன விந்தை!—இன்னும் அறியவேண்டும்—அம்மா நீ ஒரு புருஷனை மணக்க விரும்பியிருக்கிறது அவர் களுக்குத் தெரியுமா—நீ தெரிவித்தாயோ.

சு ஸ்வாமிஜீ உங்களிடம் நேராகக் கூறவே நான் லஜ் ஜைப்பட்டேனே அவர்களிடம் நான் எப்படி இதை தெரிவிப்பது.

ஸ்ரீ சகஜம்தான்! உன்னை அவர்கள் யாருக்கு மணம் செய்துக் கொடுக்க விரும்புகிறார்கள் தெரியுமோ உனக்கு.

சு எனக்கு நேராகத் தெரியாது. ஆயினும் அவர்கள் எழுதிய நீண்ட கடிதத்தில் இருப்பதை சுருக்கிச் சொல்லுகிறேன் நான் திரிச்சிராப்பள்ளி ஆஸ்பத்திரி ஒன்றில் பிரசவிக்கப்பட்டேனாம். அன்று ரெயில் விபத் தில் மரண காயம் பட்டு சிகிச்சைக்கு வந்த என் அத்தையும் அவர்களுடைய புருஷனும் அவர்களுடன் இருந்த—ஸ்வாமியின் கிருபையினால் காயம் படாது தப்பிய அவர்களுடைய ஒரே குமாரனுக்கு என்னை விவாகம் செய்துகொடுக்க வேண்டுமென்று பிரமா ணம் வேண்டிக் கொண்டார்களாம். அவர்களுடைய மனதை திருப்தி செய்ய அப்படியே செய்வதாக என் பெற்றோர்கள் ஒப்புக்கொண்டார்களாம். அதன்படி

நடக்கவேண்டுமென்று இப்பொழுது தீர்மானித்து எழுதியிருக்கிறார்கள்.

ஸ்ரீ இதற்குமுன் இதைப்பற்றி ஏதாவது பேசி இருக்கிறார்களா?

சு ஒருவார்த்தையும் பேசியதில்லை, — அக்கடிதத்தில் இதைப்பற்றி என்னிடம் பேசாததற்கு காரணம் என் பரீட்சை முடியும் வரையில் இதைப்பற்றி என்னை தொந்தரவு செய்யகூடாது என்று இருந்தார்களாம். இப்பொழுது என் தாயாருக்கு நீர் வியாதி கண்டிருப்பதாகவும் அது எப்படி முடியுமோ என்று அஞ்சினவர்களாய் என் தாயார் என் விவாகத்தை செய்து பார்க்கவேண்டுமென்றும், தான் பதினெட்டு வருடங்களுக்கு முன்செய்த பிரமாணத்தை பூர்த்தி செய்ய வேண்டுமென்று விரும்புவதாக எழுதியிருக்கிறது.

ஸ்ரீ நினைத்தேன்—அம்மா இவ்விஷயத்தில் உன் மனதில் என்ன செய்வது நியாயம் என்று தோற்றுகிறது.

சு ஸ்வாமிஜி என் வரையில் நான் காதல்கொண்டு பிரமாணம் செய்து கொடுத்திருக்கும் புருஷனையே மணப்பது தான் நியாயம் என்று தோற்றுகிறது, நான் பிறந்து ஒருநாள் குழந்தையாயிருந்தபோது என் பெற்றோர்கள் யாரோ நான் பார்த்திராத ஒரு புருஷனுக்கு என்னைக் கல்யாணம் செய்துகொடுப்பதாக வாக்களித்தது என்னை ஏன் கட்டுப்படுத்தவேண்டும்.

ஸ்ரீ ஆமாம்மா நீ சொல்வது ஒரு விதத்தில் நியாயம்தான் ஆயினும் உன்னைபெற்று இதுவரையில் வளர்த்து வந்த உனது பெற்றோர்கள் வாக்குக்கும் நீ கொஞ்சம் கௌரவம் கொடுக்கவேண்டாமா? அவர்கள் செய்த பிரமாணத்தினின்று தவறினார்கள் என்று உனது உற்றார் உறவினர்கள் அவர்களை ஏளனம் செய்தால் அது உன் மனதிற்கு வருத்தத்தை உண்டு பண்ணுதா இதைப்பற்றி நீ யோசிக்க வேண்டாமா?

சு ஆம் ஸ்வாமிஜி என் காதலர்க்கு நான் செய்து கொடுத்த பிரமாணத்தினின்றும் நான் தவறினால் அவருடைய மனதிற்கு எவ்வளவு வருத்தம் இருக்கும் என்பதையும் நான் யோசிக்க வேண்டாமா?

ஸ்ரீ ஆகவே இவ்விரண்டில் எது உயர்ந்தது என்று என்னை கேட்கிறாய் போலும்.

சு: ஆம் ஸ்வாமிஜி என் மனதில் இருக்கும் சங்கடத்தை மிகவும் தெளிவாய் கூறிவிட்டீர் தாங்களே இக்கேள்விக்கு பதில் சொல்லவேண்டும்.

ஸீ: சொல்லுகிறேன் அம்மா, எனக்கு தெரிந்ததைக் கூறுகிறேன், ஆயினும் அதற்கு முன்பு சில விஷயங்களைப் பற்றி உன் அபிப்பிராயத்தை அறிய விரும்புகிறேன்.

சு: ஸ்வாமிஜி இவ்வளவு கருணையோடு தாங்கள் கூறும்போது நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூற எனக்கு என்ன தடை.

ஸீ: முதலில் ஒன்று அரிய விரும்புகிறேன் நீ ஒரு புருஷன் மீது காதல் கொண்டிருப்பதாக கூறுகிறாயே அந்த காதல் என்பது என்ன?

சு: (சற்று யோசித்து) ஸ்வாமிஜி இந்த கேள்விக்குத் தக்க பதில் கூற எனக்குத் தெரியவில்லை. நான் அவரையே மணந்து அவரைவிட்டு இந்த ஜென்மத்திலும் எந்த ஜென்மத்திலும் இணைபிரியாது அவருடன் வாழ வேண்டும் என்று என் மனதில் படுகிறதே அதுதான் காதல் என்று நினைக்கிறேன்.

ஸீ: இப்படி உன் மனதில் தோற்றுவதற்கு அவருடைய வெளித் தோற்றமான அழகுதானே காரணம்?

சு: ஸ்வாமிஜி அவ்வாறுதான் நான் முதலில் எண்ணினேன், அவரை நான் முதலில் பார்த்தபோது அவருடைய வனப்பே என் மனதைக் கவர்ந்தது. ஆயினும் அச்சமயம் அவரை நான் மணக்கவேண்டுமென்று என் மனதில் படவில்லை. பிறகு அவருடைய நற்குண நற்செய்கைகளை நான் கண்டறிந்த பிறகே நான் அவரை மணக்கவேண்டுமென்று தீர்மானித்தேன்.

ஸீ: என்ன நீ அவருடைய நற்குணத்தைக் கண்டறிந்தது?

சு: ஸ்வாமிஜி உங்களிடம் என் மனதிலிருப்பதை தைரியமாய்க் கூறலாம் என்று என் மனதில் ஏதோ தோற்றுகிறது, சொல்கிறேன் கேளுங்கள், சென்னையில் சில மாதங்களுக்கு முன் நடந்த மேஜைப் பந்து ஆட்ட பந்தயத்தில் கடைசி போட்டியில் நான் அவரை எதிர்க்கும்படி அகஸ்மாத்தாய் நேரிட்டது. அந்தக் கடைசி ஆட்டத்தில் நாங்கள் இருவரும் ஆடிவரும் போது ஆட்டத்திற்கு மத்யஸ்தராயிருந்த ஒருவர் அவருக்குச்

சேர வேண்டிய பாயின்டை எனக்குக் கொடுத்துவிட்டார். ஆட்டத்தைப் பார்க்க வந்திருந்த அவருடைய சிநேகிதர்களெல்லாம் அவர் அப்படிச் செய்தது தவறு என்று ஆரவாரித்தனர். அப்படிச் செய்தும் அவர் மத்தியஸ்தர் கூறியது சரியோ தப்போ மத்தியஸ்தர் ஒருமுறை கூறிய பிறகு அதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் என்று சொல்லி தன்னுடைய சிநேகிதரை ஆரவாரம் செய்யவேண்டாமென்று அமர்த்தி ஆட்டத்தை முடித்து அதில் வெற்றியை எனக்கே கொடுத்தார். அந்த ஒரு பாயின்டை மத்தியஸ்தர் அவர் பக்கம் நியாயப்படி கொடுத்திருந்தால் அவரே ஆட்டத்தில் வெற்றி பெற்று பந்தய பரிசு தானே பெற்றிருப்பார் என்பதற்கு தடையில்லை அவருடைய இந்த சிறந்த தியாக குணம் என் மனதைக் கவர்ந்தது. இப்படிப்பட்ட ஆட்டங்களில் போட்டி போடுபவர்கள் இவ்வாறு விட்டுக் கொடுப்பவர்கள் மிகவும் அரிது.

ஸ்ரீ ஆமாம் இதை ஒன்றைக் கொண்டா அவருடைய குணம் மிகவும் மேன்பட்டது என்று தீர்மானித்துவிட்டாய்?

ஜ இல்லை ஸ்வாமிஜி இன்னும் கேளும். இரண்டாம் முறை நான் அவரைத் திருவொற்றியூரில் உற்சவ காலத்தில் சந்தித்தபொழுது நடந்ததைக் கூறுகிறேன் கேளும். சில தினங்களுக்குமுன் ஒற்றியூர் மகிழ்அடி சேர்வையைத் தெரிசிக்கப் போயிருந்தேன். கோவிலுக்குள் ஒரு மரத்தின் கீழ் நின்றுகொண்டு ஜனக்கூட்டத்தின் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன், திடீர் என்று "கிளை முறிகிறது! கிளை முறிகிறது!" என்று பெருங் கூச்சல் கிளம்புவதைக் கேட்டேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்—பிறகு நான் கண் விழித்து பார்த்தபோது கீழே படுத்திருந்த எனது உடலின் நாடியை யாரோ ஒரு வைத்தியர் பரிசோதித்துக் கொண்டிருந்தார். உடனே அந்த வைத்தியர் "அய்யா! இனி ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை. கிளை முறிந்து விழுந்த பயத்தினால் கொஞ்சம் மூர்ச்சையானார்கள். அவ்வளவுதான், இனி இவர்களை நீங்கள் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போகலாம். அம்மட்டும் தெய்வாதீனத்தால் அக்கிளையை உங்கள் கையால்

தாங்கி இரா விட்டால் இவர்கள் மண்டைமீது விழுந்து இவர்களுக்கு உயிர் சேதம் நேரிட்டிருக்கலாம். உங்கள் கையில் காயம் பட்டிருக்கிறாப்போல் இருக்கிறதே அதிகமாய் வீங்கியிருக்கிறது வீட்டுக்குபோய் வென்னீரால் துடைத்து ஒற்றடம் கொடுங்கள். வீக்கம் குறைந்துபோய்விடும். நான் வருகிறேன்''—என்று சொல்லிவிட்டு போய்விட்டார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த நான் இவையெல்லாம் யாரிடம் சொன்னார்? வைதியர் எனக்கு அபாயம் நேரிடாதபடி தடுத்து என் உயிரைக் காத்தவர் யாரென்று மறுபக்கம் திரும்பிப் பார்க்க மேஜை பந்தாட்டத்தில் எனக்கு ஜெயத்தை அளித்த புண்ணிய புருஷனைக் கண்டேன் உடனே மெல்ல எழுந்திருந்து ஐயோ உங்களுக்குக் காயம் பட்டிருக்கிறதாமே என்று நான் சொன்னதற்கு அவர் "அதொன்றுமில்லை, கொஞ்சம் வீக்கம் உண்டாயிற்று, அவ்வளவுதான்" என்றார்—இல்லை மிகவும் வீங்கியிருக்கிறது. இந்த இவ்வளவு பெரிய மரக்கிளை உங்கள் மண்டையில் விழுந்திருந்தால் உமக்கு உயிர்ச்சேதமும் உண்டாயிருக்கலாம் அல்லவா?—இப்படி உங்கள் உயிரை ஆனியிற் படுத்தி என் உயிரைக் காத்த உத்தம புருஷனாகிய உங்களுக்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் கைமாறு அப்புறம் சொல்லுகிறேன் அம்மா நீ மிகவும் களைத்திருக்கிறாய் முதலில் அருகாமையிலிருக்கும் ஏதாவது ஒரு காப்பி ஓட்டலுக்குபோய் முதலில் காப்பி சாப்பிடுங்கள் மற்றதெல்லாம் பிறகு பேசிக் கொள்வோம்—

கீ (மெல்ல) கையில் ஏதோ கட்டுகட்டிக் கொண்டிருந்தான்—

சு ஸ்வாமிஜி என்ன சொன்னீர்?

கீ ஒன்றும் விசேஷமில்லை பிறகு சொல்லுகிறேன்—உன் விருதாந்தத்தை கூறிவிடு விரைவில்.

சு அப்படியே நாங்கள் அருகிலுள்ள ஒரு ஓட்டலுக்குப் போய் காப்பி சாப்பிட்டானவுடன் அவரிடம் என் உயிரைக் காத்ததற்காக ஏதாவது கைமாறு பெறுமாறு வற்புறுத்தினேன்; அதற்கு அவர்—"என்ன நான் அதிகமாய்ச் செய்தேன் ஒரு பெண் ஏதோ ஆனியிற் படவிருக்கும் தருணத்தில் அதைதடுப்பது ஒவ்

வொரு ஆடவனாய்ப் பிறந்த மனிதனுடைய கடமை யன்றோ? வாஸ்தவத்தைச் சொல்லுகிறேன். நான் தடுத்தபின் நீ மூர்ச்சையானபோது உன் முகத்தை பார்த்தபின் தான் நீ இன்னாள் என்று கண்டறிந்தேன் அம்மட்டும் பரமாத்மாவின் கருணையினால் உன் உயிரைக் காத்தவனானேன் இந்த சந்தோஷமே எனக்கு தக்க கைமாறு பகவத் கீதையில் ஒவ்வொருவரும் கைமாறு கருதாது தன் கடமையைச் செய்வதே முறை என்று கூறியிருக்கிறது அல்லவா?" என்றார்.

சீ சந்தோஷம்—(மெல்ல) அவன் மறக்கவில்லை—

சு யார் ஸ்வாமி.

சீ சீக்கிரம் சொல்லுகிறேன்; நீ சொல்ல வேண்டியதை சீக்கிரம் முடி.

சு இதோ முடிக்கிறேன்—பிறகு நான் எவ்வளவு வற்புத்தியும் அவர் மறுத்தபோது நான் கொஞ்சம் கோபம் கொண்டு ஐயா என்னிடமிருந்து கைமாறு பெற உங்களுக்கு இச்சையில்லை போலும், என்று மொழிந்தேன்—ஐயோ அப்படி ஒன்றுமில்லை நீ கொடுப்பதை நான் மறுப்பனோ. ஆயினும் உன்னால் கொடுக்க முடியாததை ஒரு வேளை நான் கேட்டால் நீ என்ன செய்வாய் என்று அஞ்சுகிறேன் என்றார். அதன்மீது அவர் உட்கருத்தைக் கொஞ்சம் அறிந்தவளாய் நான் உங்களுக்குக் கொடுக்கக் கூடாதது என்னிடம் ஒன்றுமே இல்லை என்று கொஞ்சம் நாணத்துடன் கூறினேன்—அதன் பேரில் அவர் என் மீது தனக்கிருக்கும் காதலைத் தெரிவித்தார். சுருக்கிச் சொல்லுமிடத்து அவர் மீது எனக்குள்ள காதலை நானும் தெரிவித்தேன். பிறகு இருவருமாய் எங்களுக்கு இவ்வளவு அருள் புரிந்த ஒற்றியூர் ஈசனைப் பணிய வேண்டுமென்று கோவிலுக்குப் போய் கர்பகிரகத்தில் ஸ்வாமியை தரிசித்து விட்டு வெளியில் பிரதட்சணமாய் வரும்போது அங்கிருந்த மகிழமரத்தின்கீழ் நாங்கள் ஒருவரை ஒருவர் மணந்து கொள்வது என்று பிரமாணம் செய்து கொண்டோம். இது தான் என் விர்த்தாந்தம். இப்பொழுது முதலில் நான் உங்களைக் கேட்ட கேள்விக்குத் தயவு செய்து பதில் சொல்லுங்கள்.

ஸ்ரீ இதோ சொல்லி விடுகிறேன். அம்மா, ஆயினும் அதற்கு முன் இரண்டொரு சந்தேகங்களை நிவர்த்தித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சு உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள்.

ஸ்ரீ திருவொற்றியூரில் மகிழமரத்தின்கீழ் பிரமாணம் செய்து கொண்டதாகக் கூறினுயே அவ்விடம் பல நூற்ருண்டுகளுக்கு முன் சுந்தர மூர்த்தி நாயனர் பிரமாணம் செய்து கொடுத்தது உனக்குத் தெரியுமா?

சு தெரியும். சுவாமி, அதைப் படித்திருக்கிறேன்.

ஸ்ரீ ஆனல்—சுந்தரமூர்த்தி பிரமாணம் தவறி ஒரு நாச்சியாரை விட்டு மற்றொரு நாச்சியாரை நாடியது போல் உன் காதலன் உன்னை விட்டு வேருெரு பெண்ணை மணம் செய்து கொண்டால் நீ என்ன செய்வாய்?

சு ஸ்வாமிஜி என் காதலர் அப்படிச் செய்யார். தான் கூறிய பிரமாணத்தினின்றும் மாறமாட்டார்.

ஸ்ரீ மாறமாட்டார் சரிதான், மாறினல் நீ என்ன செய்வாய்?

சு அவர் தான் மாறமாட்டார் என்கிறேனே?

ஸ்ரீ ஒரு வேளை தெய்வாதீனத்தால் மாறி வேருெருத்தியை மணம் செய்து கொண்டால் நீ என்ன செய்வாய் என்று கேட்கிறேன்.

சு ஸ்வாமியின் கிருபையால் அவ்வாறு நேரிடாமலிருக்குமாக! —அங்ஙனம் நேர்ந்தால் — நான் உண்ணுவிரதமிருந்து உயிர் துறந்து மறு ஜென்மத்திலாவது அவரையே நினைத்து அவரையே மணளனகப் பெறுவேன்.

ஸ்ரீ நன்ருய் பதில் உரைத்தாய் அம்மா. என் கடைசி கேள்வி இப்படி கேட்டுப் பார்க்கிறேன். உன்னை மணந்த பின் அவர் உன்னை விட்டு வேருெரு ஸ்திரீயை விரும்பினல் அப்பொழுது என்ன செய்வாய்?

சு ஸ்வாமிஜி இதற்குப் பதில் சுலபம். நமது இதிகாச புராணங்களில் நளாயினி முதலியோர் நான் நடக்கவேண்டிய மார்க்கத்தை எனக்குக் காட்டியிருக்கின்றனர்.

ஸ்ரீ என்ன ஆச்சரியம்! தற்காலத்திய உயர்தர பெண்கள் கல்லூரியில் ஆங்கிலம் படிக்கும் நீ இதை எல்லாம் எங்கு கற்ருய் அம்மா?

சு. ஸ்வாமிஜி ஐரோப்பா அமெரிக்கா முதலிய இடங்களி லுள்ள ஆடவர் பெண்டீர் நடவடிக்கைகளையும் நமது பரத கண்டத்தில் பூர்வீகர்களுடைய இவ் விஷயத்திய நடவடிக்கைகளையும் ஒத்திட்டுப் பார்த்தும் நமது முன் னோர்களுடைய ஆசாரமே மேலானது என்று இரண் டொரு வருடங்களுக்கு முன்பே கண்டறிந்தேன்.

தீ. மிகவும் சந்தோஷம். கடைசி கேள்விநீ என்னை கேட்ட கேள்வியை உன் எதிரில் பிரசன்னரான—சாக்ஷாத் பரம்பொருளை நீ கேட்க—அவர் இவ் விஷயத்தில் உனக்கு இஷ்டமானவரத்தைக் கேள் அதைக் கொடுக் கிறேன் என்று கூறுவாராயின்—அவரை நீ என்ன கேட்பாய்?

சு. ஸ்வாமி என் பிராணநாதர் என்னையே மணந்து என் றும் பிரியாதிருக்கவேண்டும் — அன்றியும் இதனால் என் பெற்றோர்கள் கொஞ்சமேனும் வருத்தப் படலா காது, சந்தோஷப்படவேண்டும். அவர்கள் பிராமணத் தினின்றும் தவறிய பாபம் அவர்களைச் சூழலாகாது என்று கேட்பேன்.

தீ. சபாஷ், உன்னைப் போன்ற பெண்டீர்கள் நமது பரத கண்டத்தில் அநேகர் இனியேனும் பிறப்பார்களாக! இனி என் பதிலைக் கேள். நீ காதல் கொண்ட பிராண நாதரையும் உன் பெற்றோர்கள் உன்னை மணம் செய்து கொடுக்கப் பிரமாணம் செய்திருக்கும் புருஷனையும் மணந்து நீடூழி காலம் உத்தம பத்தினியாய் வழ்வாயாக பகவத் கிருபையால்.

சு. (பரபரப்புடன்) என்ன ஸ்வாமி இதென்ன துவாபர யுகமா நான் இரண்டு பேரையும் மணக்க!

தீ. என்ன அம்மா புத்திசாலியாகிய உனக்கு நான் கூறி யதின் நுட்பம் இன்னும் தெரியவில்லையா நீ மணக்க விரும்பிய காதலனும், உன்னை உன் பெற்றோர்கள் மணம் செய்து கொடுக்க பிரமாணம் செய்து கொடுத் திருக்கும் புருஷனும் — ஒரே ஒருவன் தான் அவன் பெயர் ஆனந்த ராஜு

சு. என்ன ஆச்சரியம்—என்ன ஆனந்தம் — ஸ்வாமிஜி அவர் பேர் உமக்கு எப்படி தெரிந்தது—இருவரும் ஒரு வர் தான் என்று உமக்கு எப்படி தெரிந்தது— ஸ்வாமிஜி இதை அடியாளுக்கு தயவு கூர்ந்து—தெரி விக்க வேண்டும். (அவர் பாதத்தில் நமஸ்கரிக்கிறாள்.)

ஸ்ரீ எழுந்திரும்மா, உட்கார். விரைவில் கூறுகிறேன்—உன் காதலனாகிய ஆனந்தராஜு பல வருடங்களாக என்னிடம் பகவத் கீதை முதலிய பல சமஸ்கிருத நூல்களைக் கற்று வருகிறான். சில தினங்களுக்கு முன்பாக ஒரு நாள் பாடமில்லாத சமயத்தில் திடீர் என்று என்னிடம் வந்து நீ சொன்னபடியே திருச்சிராப் பள்ளியில் நீ பிறந்த போது உங்கள் இருவருடைய தாய் தந்தையர்கள் செய்துக் கொண்ட பிரமாணத்தையும் அதனை நிறைவேற்றுவதாக அவன் தாய் தந்தையர்களுக்குத் தனது சிற்றப்பன் செய்து கொடுத்த வாக்கு பிரமாணத்தையும் என்னிடம் கூறி அதன்படி அவனுடைய அத்தையின் மகளை மணக்க வேண்டுமென்று தன்னை வளர்த்து வந்த சிற்றப்பா நிர்பந்திப்பதாகவும் கூறி, தான் ஒரு பெண்மணியை மணம் செய்துக் கொள்வதாக ஒற்றியூரில் சில தினங்களுக்கு முன் பிரமாணம் செய்ததாகவும் என்னிடம் சொல்லி இவ்விரண்டில் எதை தான் நிறைவேற்றுவது முறைமை என்று என்னைக் கேட்டான்.

சு ஹா! ஹா!—அம்மட்டும் உம்மை வந்து கேட்டாரே—ஸ்வாமிஜி அவருக்கு என்ன பதில் உரைத்தீர் தாங்கள். நான் கேட்கலாமோ?

ஸ்ரீ நீ கேளாவிட்டாலும் உனக்கு நான் உரைப்பது கடமையாகும். நான் நம்முடைய தர்ம சாஸ்திரங்களின்படி ஆராய்ந்து அவனது பெற்றோர்களுடைய பிரமாணமும் அவனை வளர்த்த சிற்றப்பாவின் பிரமாணமும் ஒன்றாய் இருப்பதால் அவைகளை நிறைவேற்றுவதே அவன் கடமையாகும் என்று அவனுக்கு அறிவித்தேன்?

சு இதற்கு அவர் என்ன பதில் உரைத்தார்.

ஸ்ரீ அதை உன்னிடம் கூறாமற் போவேனா அம்மா, முதலில் எவ்வளவோ மன்றாடினான். கடைசியில் தன் குருவாகியஎன்னுடைய கட்டளையும் அங்ஙனமே இருப்பதால் அப்படியே செய்கின்றேன் என்று எனக்கு வாக்குக் கொடுத்தான்.

சு எனக்குக் கொடுத்த வாக்கு எப்படிப் போவது என்று உம்மைக் கேட்கவில்லையா அவர்?

ஸ்ரீ நன்றாய்க் கேட்டான்— மிகுந்த மன வருத்தத்துடன் அவன் கடைசியில் கண்களில் நீர் ததும்ப அப்படிச் செய்வேனாயின் நான் மணப்பதாகச் சத்தியம் செய்து

கொடுத்த பெண்மணியின் கதி என்னவாவது—அவள் நான் வேறொரு பெண்மணியை மணக்கப்போவதைக் கேட்டால் தன் உயிரை விடினும் விடுவாள்—

ஜா வாஸ்தவத்தைச் சொன்னார்.

ஸ்ரீ அந்தப் பாபம் தன்னைத் தொடருமே அதற்கு என்ன செய்வது என்று தளதளத்த குரலுடன் கேட்டான்.

ஜா அதற்கு உமது பதில்?

ஸ்ரீ இந்தக் கேள்வி என் மனதை மிகவும் கரைத்தது — அம்பா நான் பகவத் கீதையை என் ஒரே வேதமாகக் கொண்டு நடப்பவன். ஆகவே நம்மாலாவது ஒன்றுமில்லை பாபமுமில்லை புண்ணியமுமில்லை எல்லாம் பரமாத்மாவின் செயலாகும் என்று தீர்மானித்து பகவத் கீதையில் கடைசி சுலோகம் ஒன்றில் "எல்லா தர்மங்களையும் விட்டு என்னைச் சரணாகதி அடை. நான் உன்னுடைய எல்லா பாபங்களையும் போக்கடிக்கிறேன் நீ வருந்தாதே"—என்று உபதேசித்தேன் அதன்மீது அதை ஒப்புக்கொண்டு சென்றான்.

ஜா அப்படிப்பட்ட சிறந்த நூலை நான் இதுவரையில் ஆராய்ந்து அறியாதது என் தவறாகும். நாம் ஏதோ நடக்கிறது நடக்கிறதில்லை என்று சந்தோஷப்படுகிறோம் துக்கப்படுகிறோம் கடைசியில் பரமாத்மாவின் சங்கல்பப்படி எல்லாம் நடக்கிறது அல்லவா? நான் இங்கு வருமுன் இப்படி நடந்ததே என்று மிகவும் வருத்தப்பட்டேன் இப்பொழுது இப்படி நடந்ததே என்று மிகவும் சந்தோஷப்படுகிறேன். நமக்கு எது நன்மை என்பது, நம்மைவிட பரம்பொருளுக்குத் தெரியுமல்லவா?

ஸ்ரீ அம்மா இனி நான் உனக்குப் பகவத் கீதையை உபதேசிக்க வேண்டியதில்லை, அதன் சாரத்தை நீயே அறிந்துவிட்டாயே — அம்மா நேரமாகிறது. நீ விடை பெற்றுக்கொள்ளலாம்.

ஜா (எழுந்திருந்து அவரை நமஸ்கரித்து) ஸ்வாமிஜி உம்முடைய வார்த்தைகளால் என் மனதிலிருந்த பெரும் சங்கடத்தை நீக்கியதுமன்றி எனக்கு ஓர் பேரானந்தத்தை அளித்தீர்கள் இதற்கு நான் என்ன கைமாறு செய்யக்கூடும்?—நீர் ஒன்றும் பெற்றுக்கொள்ளமாட்டீர் என்பது எனக்கு தெரியும்?—இந்த மடத்துக்கு

ஏதாவது வேண்டியிருந்தால் எனது தாய் தந்தையர்களைத் தரும்படி செய்கிறேன். அவர்கள் மிக்க செல்வந்தர்கள். அவர்கள் இந்த சந்தோஷ சமாசாரத்தை முற்றிலும் கேட்டவுடன் மிகவும் களிப்படைவார்கள்.

கீ. அம்மா, மற்றவர்களுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணுவதே எனக்கு கைமாறுகும். இந்த மடத்துக்கும் ஒன்றும் வேண்டியதில்லை தற்காலம். ஆனாலும் ஒரு காரணம் பற்றி நீ அறிந்த உண்மையை உனது கல்யாணம் பூர்த்தியாகும் வரையில் மற்றவர்களுக்குத் தெரிவியாதிருத்தல் நலம் என்று தோற்றுகிறது. நான் ஒரு யோசனை செய்திருக்கிறேன், அதற்கு உன் உதவி சிறிது வேண்டும்.

சு. ஸ்வாமிஜீ, நான் செய்யக்கூடிய எந்த உதவியையும் செய்யச் சித்தமாயிருக்கிறேன்.

கீ. நான் முன்பே கேட்க மறந்தேன், நீயும் உன் காதலனும் மிகுந்த நெருங்கிய பந்துக்களாயிருந்தும் ஒருவரை ஒருவர் இன்னார் என்று அறியாததற்குக் காரணம் என்ன?

சு. அதை நான் முன்பே கூறி இருக்கவேணும்; நான் பிறந்தவுடனே எங்கள் இரு குடும்பத்தாருக்கும் ஓர் நில சம்பந்தமாக பெரும் சச்சரவு நேரிட்டதாம்; அது முதல் எங்களுக்குள் போக்கு வரவு அற்றுப்போயது; என் தாயாருக்கு உடம்பு அசௌக்கியமான பிறகு தான் ஒருவரை ஒருவர் விசாரிக்கத் தலைப்பட்டனர், அதுவும் கடித மூலமாக.

கீ. சரி—நான் உன் காதலனாகிய என் சிஷ்யனுடைய பரிபக்குவ நிலையை இன்னும் கொஞ்சம் பரிசோதிக்க விரும்புகிறேன். நீ அதற்கு எனக்குக் கொஞ்சம் உதவ வேண்டும்.

சு. நான் என்ன செய்யவேண்டும் என்கிறீர் ஸ்வாமிஜீ?

கீ. வேறொன்றுமில்லை, உனது விவாகம் முடிந்து உன்னை சயனக் கிரகத்தில் சந்திக்கும் வரையில் அவனது மாமன் மகளாகிய நீதான் அவன் காதலித்த பெண்மணி என்பதை அவனுக்கு — எந்த விதத்திலும் தெரிவியாதே.

சு. இது கஷ்டமான காரியமல்ல. அப்படியே செய்கிறேன். எங்கள் குலவழக்கம் சயனக் கிரகத்தில் சந்திக்கும் வரையில் ஒரு புருஷன் தன் பெண்சாதியின் முகத்தைப் பார்க்கலாகாது என்பதாம், ஆகவே இது அவ்வளவு கஷ்டமான காரியமல்ல. தாங்கள் விரும்பியபடியே செய்கிறேன். ஸ்வாமிஜீ என் மனதில் நான் சந்தோஷமடைந்தது போல் நீங்கள் அவரையும் சந்தோஷமடையும்படி செய்யவேண்டும் என்று கேட்கலாம் என்றிருந்தேன்.

ஸ்ரீ. கொஞ்சம் பொறுத்துக்கொண்டிரு அம்மா. பிறகு இதுவே அவனுக்கும் பேரானந்தத்தை அளிக்கும்—போய் வா அம்மா—தீர்க்க சுமங்கலீபவ — அடே நமசிவாயம் (அவன் அருகில் வர) நம்முடைய ஆஸ்ரமத்தின் வழக்கப்படி இந்த அம்மாள் இங்கு வந்தது முதன்முறை ஆகையால் இவர்களுக்கு நான் தமிழ் உரையுடன் பதிப்பித்த பகவத் கீதை புத்தகம் ஒன்று கொடுத்தனுப்பு.

சு. ஸ்வாமிஜீ குருபிரசாதம் (நமசிவாயம் சுவர்ணபாயை அழைத்துக்கொண்டுபோகிறுன்.)

## மூன்ருவது இடைக்காட்சி

இடம்: சென்னையில் ஒரு பங்களாவில் வருபவர்களை வரவேற்கும் அறை, சோபாக்கள் நாற்காலிகள் முதலியவற்ருல் மிகவும் அழகாய் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

*செல்லப்பெருமாள் ஒரு தபால் காகிதத் துண்டை படித்தவண்ணம் உலவிக் கொண்டிருக்கிருன்.*

செ. சரிதான், நாளை காலமெ எப்படியும் வந்துவிடுவாள், அவள் வருவதற்குமுன் இன்றிரவே கம்பிநீட்ட வேண்டியதுதான் — (இரண்டாம் கட்டை நோக்கி) கனகம் பொண்ணு எல்லாம் சிங்காரிச்சி முடிஞ்சிதா சீக்கிரம்? நான்காவது ஏமாந்த சோணகிரி வரும்காலமாச்சுது— இதை முடித்துவிட்டு நம்முடைய இரண்டு டிரங்குகளையும் பாக் பண்ணிவை. இண்ணெ ராத்திரி ரயிலெயே புறப்படணும் நம்ப—அந்த பிசாசி பெண்ணை தேடிக்கினு நாளை காலமெ வராளாம்.

க. (உள்ளிருந்து) சரிதான், சரிதான்.

செ. அதொ வராப்போலெ யிருக்குது பிள்ளையாண்டான்.

குருபாதம் வருகிறான்.

செ. வாங்க மாப்ளெ என்ன போனகாரியம் ஜெயமா ?

கு. ஜெயமில்லாபோன வருவனா, இதோ கொண்டுவந்திருக்கிறேன்.

செ. சந்தோஷம், ஆனல் கல்யாணத்துக்கு நாள் பார்க்க வேண்டியதுதான் — எவ்வளவு கொண்டுவந்திருக்கிறீர்கள்?

கு. ரொக்கமா ஆறுயிரம் ரூபாயும் நகையா நாலாயிரம் ரூபாயும்.

செ. ஐயையோ நகையா ஒண்ணு கூடாது எல்லாம் ரொக்கமாதான் வேணுமென்று முந்தாநாளே சொன்னேனே.

கு. இந்த நகை (ஒரு ரவை அட்டிகையை எடுத்துக்காட்டி) குறைந்த பட்சம் ஐயாயிரமாகிலும் பெறும். இப்பொ நான் அவசரப்பட்டு விக்கபோன மூவாயிரத்துக்கு மேலே கேக்கமாட்டேன்றாங்க. இப்பொ ரொக்க பணம் ஆப்பிடரது கஷ்டமாயிருக்குது பாருங்க.

செ. (அட்டிகையை கையில் வாங்கி பார்த்து) கட்டாயமாய் ஐயாயிரமும் தாளும் அதுக்கு மேலும் தாளும். நான் சொல்ரத்தை கேளுங்க. இந்த நகையை நீங்களே வைச்சிக்கிங்கொ கல்யாணத்துநண்ணு கல்யாணப் பெண்ணுக்கு எல்லாரும் பார்க்கும்படியாக பரியமாய் கொடுங்க. அது உங்களுக்கும் மரியாதை எங்களுக்கும் மரியாதை. இதொ பாருங்கொ மாப்ளெ இந்த பதினயிரம் ரூபாய் உங்களை கொண்டுவரச் சொன்னது உங்க அந்தஸ்தை பார்க்கிறதற்குதான்—அந்த நோட்டுகளை கொடுங்கள் (நோட்டுகளை வாங்கிக்கொண்டு பின்கட்டு பக்கம் திரும்பி)—கனகம் கொஞ்சம் வா இப்படி.

கனகம் வருகிறாள்.

செ. இந்த நோட்டுகளை யெல்லாம் ஜாக்கிரதையா கல்யாணப் பெண் டிரங்கில் வைத்து பூட்டு (கனகம் நோட்டுகளை வாங்கிக்கொண்டு உள்ளே போகிறாள்.)

கு. பெண்ணெ — இன்னொரு தரம் — நான் கொஞ்சம் பார்க்கலாமா?

செ. அண்ணைக்கிதான் பார்த்தாச்செ

கு. வேறொண்ணுமில்லே நான் சாமுத்ரிகா சாஸ்திரம் படிச்சிருக்கிறேன்—கைரேகையை கொஞ்சம் பார்க்க வேண்டும்.

செ. அதுக்கென்ன ஆக்ஷேபணையில்லெ—கனகம், கல்யாணப் பெண்ணை ஒரு நிமிஷம் அழைச்சிக்கினு வா இப்படி.

க. (உள்ளே இருந்து) இதோ வரேன்.

செ. இதொ பாருங்க மாப்ளெ உங்களுக்கு தெரியாததல்ல இது நம்ம கொண்டை கட்டி வேளாள ஜாதியிலெ கல்யாணப்பந்தலிலே அழைச்சிகினு வரத்துக்கு முன்னெ பெண்ணை கண்லெ காட்டமாட்டார்கள். உங்க விஷயத்திலே இதை யெல்லாம் நான் கவனிக்கவில்லே. கல்யாணம் எல்லாம் நிச்சயமாய் விட்டது—பொண்ணு உங்கள் படத்தை பார்த்துட்டு உங்களேயே கல்யாணம் பண்ணிக்கிறேன் இன்னு சொல்லியிருக்கிறாள் அதை இப்பதான் உங்களுக்கு சொல்லுகிறேன்—

தலேகுனிந்து இருக்கும் சிங்காரிக்கப்பட்ட கோமதியை கையை பிடித்து அழைத்துக்கொண்டு கனகம் வருகிறாள்.

செ. கனகம், பெண்ணின் உள்ளங்கையை மாப்பிள்ளை பார்க்க வேண்டுமாம்.

கு. இடது கையை (கனகம் கோமதியின் இடது கையை பிடித்து காட்ட குரு பாதம் அதை சற்று உற்று பார்க்கிறான்)

கு. சரிதான்.

க. ரேகை எப்படி யிருக்குதொ மாப்பிள்ளைக்கு திருப்தி தானு?

கு. நன்றாய் இருக்கிறது பெண் ஒரு தனவந்தனை மணம் புரிவாள் என்று சொல்லுகிறது—அன்றியும் தன் கணவனுக்கு மிகவும் கீழ்படிந்து நடப்பாள் என்று சொல்லுகிறது.

செ. அதைப்பத்தி உங்களுக்கு சந்தேகமே வேண்டாம் மாப்பிளெ. உங்க வார்த்தைக்கு குருக்காக ஒருவார்த்தையும் பேசமாட்டாள் நான் உத்திரவாதம். கனகம் பெண்ணை அழைத்துக்கொண்டு உள்ளேபோ (கனகம் அப்படியே செய்கிறாள்) மாப்ளெ இனி கல்யாணத்

துக்கு நாள் வைக்க வேண்டியது தான். இந்த ஆடி மாசம் போய் ஆவணி மாசம் ஒரு நல்ல நாளாய் ஏற்பாடு செய்கிறேன். கல்யாணத்திற்கு என் பந்துக்களுக்கெல்லாம் சொல்லவேண்டியிருக்கிறது நான் கவர்னரைக்கூட அழைக்க வேண்டியிருக்குது.

கு. சந்தோஷம்.

செ. ஆயினும் ஒரு வார்த்தை கல்யாணப் பத்திரிகை வெளியாகும் வரை இதைபற்றி ஒருவரிடமும் ஒரு வார்த்தையும் பேசாதீர்கள். இது ரகசியமாக இருக்கவேண்டிய காரணம் அன்றையதினமே சொன்னேனே. அதற்கு முன்பாக தெரிந்தால் அந்த கோழிப்பட்டி ஜமீந்தார் மகன் ஏதாவது முட்டுகட்டை போடுவான், அவன் முப்பதினாயிரம் ரூபாய் கொடுப்பதாக கூறியும் நான் என் பெண்ணை அவனுக்கு கொடுக்கமாட்டேன் என்று மறுத்ததற்காக—இந்த பெண்ணுக்கு வேறு எங்கு கல்யாணம் ஆகப்போகுது பார்க்கிறேன் என்று கருவிக் கொண்டிருக்கிறான். அதற்காக, எல்லாம் ரகசியமாய் நடக்கவேண்டியதாய் இருக்கிறது.

கு. அப்பொ நான் வரட்டுமா—சீக்கிரம் நாள் குறித்து விடுங்கள்.

செ. அதுக்கென்ன, அப்படியே ஆகட்டும்—வாருங்கள்.
(குருபாதம் போகிறான்.)

செ. (ஒருபுறமாக) இப்படிப்பட்ட முழு முண்டங்கள் உலகத்தில் இல்லாவிட்டால் என்னைப் போன்றவர்களுக்கு பிழைப்பு எப்படி?

காட்சி முடிகிறது.

## நான்காவது இடைக்காட்சி

இடம்: சென்னையில் போலீஸ் ஸ்டேஷன். சப் இன்ஸ்பெக்டர் ராமானுஜ முதலியார் மேஜை அருகில் உட்கார்ந்து கொண்டு சில காகிதங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். எதிரில் கோமதியுடன் பார்வதி அம்மாள் நின்றுக்கொண்டிருக்கிறாள். கதவருகில் கான்ஸ்டேபிள் முத்துசாமி நின்றுக் கொண்டிருக்கிறான்.

ரா. எந்த ஊரம்மா உங்க ஊரு?

பா. தொரப்பாக்கங்கொ

ரா. சரியான ஊர்தான் — அதெல்லாமிருக்கட்டும், இந்த பெண்ணுக்கு தாயாராயிருக்கிறநீ, என்னதான் பந்துவாயிருந்தாலும் ஒரு ஆம்பிளெ பட்டணத்துக்கு அழைச்சிம்போறென்னு அவன் பின்னலே என்னமா அனுப்பிச்செ — அதுவும் இந்த ஊமைப் பொண்ணெ?

பா. அதானுங்கொ ஊமையாயிருக்காளெ—ஊமைங்களை எல்லாம் படிக்க வைக்கிறதுக்கு சென்னை பட்டிணத்திலே ஒரு பள்ளிக்கூடம் வைச்சிருக்கிறுங்கோ அதிலே கொண்டுபோய் உட்டு நான் படிக்கவைக்கிறேன் அந்த செலவை எல்லாம் நான் பார்த்துக்கிறேன், இண்ணு சொல்லி ஏமாத்திறுங்கோ அந்தபாவி— அவனை நம்பி ஏமாந்தேனுங்கொ.

ரா. அவன்தான் பெரிய கேடிஆச்சே உன்னை ஏமாத்தினது ஆச்சரியமல்ல—ஆர்டர்லி, மற்ற முண்டங்களையும் உள்ளே வரச்சொல்.

கான்ஸ்டபிள் சைகைசெய்ய கோவிந்தசாமி, சொக்கலிங்கமுதலியார், முனுசாமிமுதலியார் உள்ளே வந்து ஒருபுறமாய் நிற்கிறார்கள்.

ரா. யாரப்பா அது கோவிந்தசாமி?—முதல் முண்டம்.

கோ. நான் தானுங்கொ.

ரா. ஏன்டாப்பா சின்னபயனு யிருக்கிரே உனக்கென்னத்துக்கு இப்போ கல்யாணம் இப்படி ஏமாந்து போவையா!

கோ. இல்லெங்கொ எங்க அம்மான் மாமன் தன் பொண்ணே எனக்கு கொடுக்கிறேன் இன்னு சொல்லி நாளெல்லாம் வெச்ச பிறகு மாட்டேன்னு ஏமாத்திட்டாரு— அந்த கோபத்திலே எப்படியாவது அந்த தேதிக்குள்ளவே நானு வேறு எங்கையாவது கல்யாணம் பண்ணிக்கிறேன் இன்னு சபதம் பண்ணேன். உடனே சுதேசமித்ரன்லெ அட்வடைஸ்மென்ட் செய்திருந்ததை பார்த்து—

ரா. அவன் வலையிலெ விழுந்து அவனுக்கு ரூபாயை நீ எவ்வளவு கொடுத்தே?

கோ. ரொக்கமா ஆயிரம் ரூபாய்ங்கொ.

ரா. ஆமாம்பா. பழைய கேடி ரொக்கமா வாங்காதெ வேறே என்னமா வாங்குவான்—உம், இரண்டாவது திரு முண்டம் யாரடாப்பா அது சொக்கலிங்க முதலியார்?

சொ. நான் தானுங்கொ.

ரா. ஏன் ஐயா 'உன்னே பார்த்தா க்ஷயரோகம் பிடிச்ச வொட்டம் இருக்குது. நீ எப்படி வந்து இதுலே ஆப்டு கினு ஏமாந்தெ ?

சொ. ஆமாங்கொ எனக்கு கொஞ்சம் இரும்பல் இருக்குது. போனமாசம் என் தாரம் தப்பிப் போச்சி நீ உடனே இன்னொரு கல்யாணம் பண்ணிக்கினு அந்த சந்தோஷத்திலே இந்த இரும்பல் எல்லாம் தீர்ந்து பூடும்னு என் பங்காளி ஒரு வைத்தியம் தெரிந்தவன், சொன்னு னுங்கொ அதும்பேர்லெ எங்க பந்துக்களெ யாரும் பெண்ணு கொடுக்க மாட்டேன்னு சொன்னுங்கொ—

ரா. அத்தொட்டு இந்த பொண்ணு கிடெச்சிதேன்னு ஏமாந்து ரூபாயை தொலெச்செ நீ எவ்வளவு தொலெச்செ?

சொ. இரண்டாயிரத்து ஐநூறுங்கொ எல்லாம் நோட்டா.

ரா. ஆமாமா ரூபாயா யிருந்தால் எவ்வளவு பளுவாயிருக் கும் (காகிதத்தை பார்த்து)— யாரய்யா அது முனுசாமி நீங்கதானே?

மு. ஆமாங்கொ.

ரா. அடடா தலெ எல்லாம் நரைச்சி போச்சி--கிழவன்—உங் களுக்கு என்னத்துக்கய்யா இந்த வயசிலே கல்யாணம் நீங்களும் இப்படி ஏமாந்து போகலாமா மீசை எல்லாம் நரைச்சி போச்செய்யா!

மு. ஆமாங்கொ எனக்கு ஒரு ஜோசியன் அறுவதாம் கல் யாணம் ஆகும் இன்னு சொன்னன் அத்தொட்டு.

ரா. அறுபதாவது வயசிலே இந்த சின்ன பொண்ணே கல்யாணம் பண்ணிக்க பாத்திங்கொ!—நீங்கள் எவ் வளவு பரியம் போட்டிங்கொ ?

மு. மூவாயிரத்து ஐநூறுங்கொ வீட்டை குதுவை வைத்து வாங்கி கொடுத்தேனுங்கொ (கண்ணைத் துடைத்துக் கொள்ளுகிறார்)

ரா. இப்பொ வருத்தப்பட்டு என்ன பிரயோசனம்? ஆங்கிலத்திலே, "கிழ முண்டத்தைவிட பெருமுண்டம் எங்கும் கிடைக்காது" என்று ஒரு பழமொழி உண்டு.

குருபாதம் விரைந்து ஓடி வருகிறான்.

கு. (பெருமூச்செறிந்து கொண்டு) • அத்தான்! அத்தான்!!—இந்த பொண்ணு இங்கையா இருக்குது!—

ரா. ஓஹோஹோ ஏண்டாப்பா நீயும் ஏமாந்தயா என்ன—இந்த முண்டங்களை போலெ?

கு. ஆமாம் அத்தான் சுதேசமித்ரன் அட்வடைஸ் மெண்டில் பார்த்து நான் கல்யாணம் பண்ணிக்கலாமின்னு அந்த திருடன் குறித்த நம்பர் பங்களாவுக்கு போய் இந்த பெண்ணை பார்த்தேன்—அப்பொ நகை எல்லாம் போட்டிருந்தாளே!

ரா. எல்லாம் கில்ட் நகைகள் அதெல்லாம் ஒண்ணுமா (மேஜையின் பேரிலிருக்கும் ஒரு முடிப்பைக் காட்டி) இதையெல்லாம் வித்தால் ஐம்பது ரூபாய் கிடைக்கும். அதை வேண்டுமென்றால் நீ எடுத்துக்கொள்—இல்லை இல்லை இந்த மூணு முண்டங்களும் ஏமாந்து பணம் கொடுத்துட்டாங்கொ நீங்களெல்லாம் கொடுத்த கணக்காச் சாரப்படி பங்கிட்டு எடுத்துக் கொள்ளுங்கள்—உன் பங்குக்கு நீ எவ்வளவு தாரை வார்த்தாய்?

கு. ஆறாயிரம் ரொக்கம் எல்லாம் நூறு ரூபாய் நோட்டுகள். அத்தான் எப்படியாவது அந்த திருட்டு கழுதையை கண்டு பிடிச்சி என் ரூபாயை மாத்திரம் வாங்கி கொடுத்திடுங்கொ அவன் எப்படியாவது போகட்டும்.

கோ.
சொ.
மூ. } ஆமாமாங்கொ!!!

ரா. எமன் வாயில் போனது எப்பவாவது திரும்பி வருமா? போனது போனதுதான்—அவன் புச்சேரிக்கு டிம்கி கொடுத்திருப்பானே—இரண்டு தரம் தப்பிச்சிகினான். இந்த மூணாந்தரம் எப்படியாவது அவனைப் பிடிக்க பார்க்கிறேன். அதிருக்கட்டும் இந்த பெண்ணின் கதி என்னாவது யாராவது கட்டிக்கிரைங்களா இந்த ஊமை பெண்ணை?

கோ
சொ
மு
கு } ஊமை பெண்ணு !!!!

ரா பின்னெ என்ன—எல்லாம் முழு முண்டங்க !— அது கூட விசாரிக்காதெ ரூபாயை தொலேச்சிங்களே, அந்த கேடி என்ன லேசான ஆசாமியா என்ன? தன் திருட்டு தனம் வெளியாவாதெ இருக்க இந்த ஊமை பெண்ணை பிடிச்சி வந்தான். ஆர்டர்லி இவங்களையெல்லாம் வெளியிலெ அழைச்சி போ, எல்லாம் போங்க கைதி அப்டால் உங்களுக்கெல்லாம் சாட்சி சம்மன் அனுப்புகிறேன் இனிமேலாவது ஜாக்கிரதையா பொழைங்க குருபாதம் நீ மாத்திரம் கொஞ்சம் இரு (கான்ஸ்டபிள் மற்றவர்களை எல்லாம் வெளியில் அழைத்துக்கொண்டு போகிறான்.)

ரா ஏண்டாப்பா நம்ப குடும்பத்தின் பேரை கெடுக்க பிறந்தாய்? ஒரு ஊமை பெண்ணை கட்டிக்கிறத்துக்காக ஆறாயிரம் ரூபாய் ஏமாந்தான் இந்த படிச்ச முட்டாள் இண்ணு நம்ம பந்துக்களெல்லாம் எழுத்தாளி பண்ணுவாங்களே—அந்த சொர்ணலிங்க முதலியார் தன் பெண்ணை கொடுக்கிறேன்னு சொன்னாரே, அத்தெ அப்பவே கட்டிகிணு இருந்தால் இந்த மாதிரி ஆறாயிரம் ரூபாய் ஏமாந்திருக்கமாட்டாயே—இப்பவும் ஒண்ணும் கெட்டு போகலெ ஆமாமுண்ணு சொல்லு அவர் கிட்டெ சொல்லி இந்த கல்யாணத்தை உடனே முடிச்சி வைக்கிறேன் என்ன சொல்றெ ?

கு எனக்கு கல்யாணமே வேண்டாம் நான் சன்யாசம் வாங்கிக்க போறேன் (போகப் பார்க்கிறான்)

ரா கொஞ்சம் பொறு இந்த வயசிலெ உனக்கு யாருடா சன்யாசம் கொடுப்பாங்கொ?

கு அடையாறில் ஒரு சன்யாசி இருக்கிறாருமே அவரை போய் கேக்க போறேன்.

ரா யார் கிதானந்த ஸ்வாமியாரா ?

கு ஆமாம்.

ரா அவர் தான் உனக்கு சரியான புத்தி சொல்ல தக்கவர் அவரை உடனே போய் கேள் (குருபாதம் போகிறான்)

ரா இதுக்குத்தான் நம்ப பெரியவங்கொ பெண் பார்க்கிற தானல் பொம்மனுட்டிகளை அனுப்பிச்சி எல்லாம் விசாரிச்சிகினு வரணுமிண்ணு ஏற்பாடு பண்ணி வைச்சாங்கொ. இந்த காலத்து படிச்ச முண்டங் களுக்கு அதெல்லாம் தெரியுதா.

குருபாதம் திரும்பி வருகிருன்.

கு அத்தான் நான் மைலாப்பூருக்கு போகலே நான் குறள்ளே படிச்சது ஞாபகத்துக்கு வந்தது அதுலே "அறத்தாத்தின் இல்வாழ்கை யாற்றின் புறதாட்டில் போய் பெறுவதெவன்" என்று எழுதியிருக்கிறது அத்தொட்டு நிச்சயதார்த்தம் ஆன பெண்ணையே கட்டிக்கலாமென்று தீர்மானம் பண்ணிட்டேன் ஆகவே நீங்க அதுக்கு ஏற்பாடு பண்ணிடுங்கொ.

ரா படிச்ச முட்டாள் இண்ணு நீ தான் அதுக்கு சரி யான உதாரணம்—இப்பவாவது புத்தி வந்துதே— அப்படியே செய்யறேன் பயப்படாதே.

## மூன்ருவது காட்சி

இடம்: ஆனந்தராஜுவின் சயனக்கிரகம் புஷ்பங்கள் முத லியவைகளால் கட்டில் அலங்கரிக்கப் பட்டிருக்கிறது. ஒரு பக்கம் இருக்கும் மேஜையின் மீது ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தேர் மீதிருந்து அர்ஜுனனுக்கு கீதோ பதேசம் செய்வதுபோல் ஒரு பொம்மை வைக்கப் பட்டிருக்கிறது.

ஆனந்த ராஜு அறையில் உலாவிக்கொண் டிருக்கிருன்.

ஆ என்ன ஆச்சரியம்! நான் எவ்வளவோ மன உறுதி யுள்ளவன் என்று நினைத்துக் கொண்டிருந்தேன், நினைப்பது நமது பொறுப்பு நடப்பது பகவத் பொறுப்பாயிருக்கிறதே. அன்றைய தினம்—(ஜேபி யிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து படிக்கிருன்.) "கல்யாணப் பெண்ணுக்கு பெரியம்மை வார்த்து இப்பொழுதுதான் சொஸ்தமாகி வருகிருள், முகத் தில் சொட்டை விழுந்திருக்கிறது இதை உங்களுக்கு தெரிவிக்க வேண்டியது எங்கள் கடமை. இவ்விஷ யத்தை மாப்பிள்ளைக்கு அறிவித்து அவர் எங்கள்

பெண்ணை இப்பொழுது விவாகம் செய்துகொள்ள இச்சைப் படுகிறாரோ இல்லையோ என்பதை எங்களுக்குத் தெரிவியுங்கள். நாங்கள் கட்டாயப் படுத்துகிறோம் என்று நினைக்க வேண்டாம்"—என்று என் மாமனாரிடமிருந்து கடிதம் வந்த போது என் சிற்றப்பாவிடம் எப்படியாயிருந்த போதிலும் உங்கள் கட்டளையையும் என் பெற்றோர்கள் பிரமாணத்தையும் என் குருவின் ஆக்கினையையும் நிறைவேற்றுகிறேன் என்று சொல்லிவிட்டு—கல்யாணமானவுடன் கல்யாண பந்தலிலெயே, நான் என் கடமையை நிறைவேற்றிவிட்டேன் என் இச்சைபடியே சாந்தி ஆஸ்ரமம் சென்று என் குருவின் பாதம் சரண் புகுந்து சன்யாச ஆஸ்ரமத்தை மேற்கொள்ள போகிறேன்-என்று சொல்லிவிட்டு நேராக மைலாப்பூருக்கு போய்விட வேண்டுமென்று நான் தீர்மானித்ததென்ன?—நான் நடந்ததென்ன இவ்வாறு என் மனம் திரும்பியதற்கு காரணம் நான் அறிகிலேன். என் மாமன் மகளை நான் செய்த பிரமாணத்திற்கு விரோதமாக, மணப்பது தவறு என்று என் மனதிலிருந்த வருத்தம் மாறி நான் மணப்பந்தலிலெ நுழைந்தவுடனே— அப்பெண்ணின் கரத்தை எங்கள் ஜாதியின் வழக்கப்படி பாணிக்கிரணம் செய்துகொள்ள நான் தீண்டியபொழுது—அவள் அம்மை வார்த்த அலங்கோலமுள்ள முகத்தையுடையவள் என்று என் மனதிலிருந்த அருவை எல்லாம் போய் என்னையும் அறியாதபடி எனக்கு ஒரு சந்தோஷம் உண்டாயிற்றே—(சிறிது நகைத்து) என்ன விந்தை ஒற்றியூரில் என் காதலியின் கரத்தைத் தீண்டி அவள் விரலில் என் பச்சை மோதிரத்தை இட்டபொழுது எனக்குண்டான பரவசம் போல் இருந்தது இது—சீசீ இப்படியே யோசித்துக் கொண்டு போனால் என் தீர்மானத்தினின்றும் முற்றிலும் நழுவினவனாவேன்—கிருஷ்ணா கிருஷ்ணா! பொம்மைகளாகிய எங்களை படைப்பித்து என்னென்ன நாடகங்கள் ஆட்டிவைக்கின்றாய் அப்பா, இப்படி எங்களை ஆட்டி வைப்பதற்கு ஏன் பிறப்பித்திருக்கிறாய்?—இதற்கு சரியான பதில் உனது கீதையில் எங்களுக்கு முற்றிலும் கூறவில்லையே.—சரி அவள்—என் மனைவி —(பெருமூச்செறிந்து) வரும் நேரமாகியது. அவள் வந்தவுடன் அவளைத் தீண்

டாது அவளிடம் உடனே சன்யாஸம் கொள்ள உத்திரவு கேட்கிறேன்—அவள் புத்திசாலியாகத்தான் தோற்றுகிருள் — இல்லாவிடில் தனக்கு வைசூரி வார்த்து தன் அழகு குன்றி இருப்பதை மறைத்து வையுங்கள் என்று தன் தாய் தந்தையர்களிடம் கூருது, வெளிப்படையாய் இந்த விவரத்தை அவருக்கு தெரிவியுங்கள் என்று சொல்லி அனுப்பியிருக்க மாட்டாள் அல்லவா?—அன்றியும் இந்த விவாகம் முடிக்க எனக்கு சம்மதமானல் அப்படி செய்யட்டும் இல்லாவிட்டால் வேண்டாம் என்று தன் தாய் தந்தையர்களிடம் கூறி இருப்பாளா? இப்படிப்பட்ட உத்தமிகள் எத்தனை பேர்கள் இருப்பார்கள் இவ்வுலகில்? — இப்படிப்பட்டவள் என் உண்மையான மனே நிலைமையை அறிந்தபின் எனக்கு தானுகை உத்திரவு கொடுப்பாள் என்று நம்புகிறேன்—ஒருவேளை கொடுக்கா விட்டால் (பெருமூச் செறிந்து) பெரியோர்கள் காட்டிய வழியாகிறது—"கூருமற் சன்யாஸம் கொள்ளு" என்று வழிகாட்டி இருக்கிருர்கள் அல்லவா, அதன்படி நடக்கிறேன்—ஐயோ ஒரு பெண்மணிக்குக் கூறிய பிரமாணத்தினின்றும் தவறினதுமன்றி, காலையில் மணச்சடங்கில் இப்பெண்ணிற்குக் கூறியபிரமாணத்தினின்றும் கூட தவறுகின்றேனே—பாபத்தின் மேல் பாபமா!—(கிருஷ்ண விக்ரகம் இருக்கும் பக்கம் திரும்பி) ஏ கிருஷ்ண பரமாத்மா, இது உன் செயல். ஆகவே அந்த பாபத்தை எல்லாம் நீதான் சுமக்க வேண்டும், என் கடமைப்படி நான் நடக்கிறேன் — அதோ அவள் வருகிற சப்தம்—

ஒரு பெரிய வெள்ளி தட்டில் பலகாரங்களையும் சந்தனுதி புஷ்பங்களையும் எடுத்துக்கொண்டு முகம் முற்றிலும் முக்காடிட்டவளாய் சுவர்ணுபாய் கதவை முற்றிலும் திறந்துகொண்டு மெல்ல வருகிருள்.

ஆ. பெண்ணே, அந்த தட்டை இந்த மேஜையின்மேல் வைத்துவிட்டு என் எதிரில் வந்து உட்கார் அந்த நாற்காலியின் மீது. (சற்றுதூரத்தில் போட்டிருக்கும் மற்ருரு நாற்காலியின் மீது தான் உட்கார்ந்துகொண்டு) பெண்ணே சங்கோசப் படாதே நானே உட்காரச் சொல்கிறேனே—இதில் மரி

யர்தை குறைவில்லை (சுவர்ணபாய் நாணத்துடன் நாற்காலியில் ஒருபுறம் உட்காருகிருள்.)

ஆ பெண்ணே, நீ புத்திசாலியாகத் தோற்றுகிருய் — உன்னை சில கேள்விகள் கேட்கவேண்டும், அதற்கு உண்மையாக பதில் உரைப்பாய். முதல் கேள்வி மனைவியின் முதல் கடமை என்ன?

சு (தன் சொந்த குரலை மாற்றி மெல்லிய குரலுடன் பேசுகிருள்) மனைவியின் முதல் கடமை, தன்னை மணந்த கணவன், மனம் கோணுதபடியும் மாறு சொல்லாமலும் அவர் சொன்னபடி நடப்பதே.

ஆ அடடா! மிக்க தக்க பதில்—நீ மிகவும் கல்வி கேள்வி களில் தேர்ந்தவளாகத் தோற்றுகிருயே-நீ ஏதாவது பள்ளிக்கூடத்தில் படித்திருக்கிருயா?

சு ஏதோ கொஞ்சம்—

ஆ சரி அவைகளை எல்லாம் பற்றி விசாரிக்க இப்பொழுது காலமில்லை. இரண்டாவது கேள்வி, நீ இந்த மணத்துக்கு மனம் ஒத்து இசைந்தாயா அல்லது உன் பெற்றோர்கள் பலவந்தத்தினுல் இசைந்தாயா?

சு என் முழுமனதுடன்—நான் இசைந்தேன்.

ஆ கொஞ்ச நாளைக்கு முன் உனக்கு பெரியம்மை வார்த்தபோது எனக்கு உன்னை மணக்க இஷ்டமில்லாவிட்டால் என்னை உன் தாய் தந்தையர்கள் நிர்பந்தித்திருக்கலாகாது என்று அவர்களிடம் நீ கூறியது உண்மைதானு?

சு ஆம்.

ஆ அப்பொழுது உன்னை மணக்க எனக்கு இஷ்டமில்லை என்று நான் பதில் அனுப்பியிருப்பேனுயில் நீ என்ன செய்திருப்பாய்?

சு சற்று மௌனமாயிருக்கிருள்.

ஆ பெண்ணே ஒன்றும் அஞ்ச வேண்டாம் தாராளமாய் உன் மனதில் இருப்பதை எனக்குச் சொல்.

சு நான்—கன்னியாக என் காலமெல்லாம் கழிப்பேன் அல்லது — என் உயிரையாவது மாய்த்துக்கொள்வேன்.

ஆ அடடா — என்ன விபரீதம் எதற்காக? அதனால் உனக்கு என்ன பலன்?

சா அப்படி செய்தால் மறு ஜென்மத்திலாவது உங்களை நான் — கணவனாகப் பெறுவேன்.

ஆ (திடுக்கிட்டெழுந்து) கிருஷ்ண கிருஷ்ண! இதென்ன நான் ஏதோ பதில் கிடைக்குமென்று கேட்ட கேள்விக்கு இப்படிப்பட்ட பதில் கிடைத்ததே! — கீதாசாரியனே! நீ எனக்கு கீதோபதேசம் செய்ததெல்லாம் இப்படி என் மனதை கலக்கவா? அப்பா நான் தாங்க முடியாத சுமையை இன்னும் என் தலைமீது சுமத்தாதே — ஒரு பெண்மணிக்கு நான் துரோகியானது போதும் இந்த அருங்குணம் வாய்ந்த பெண்மணிக்கும் துரோகி ஆகாதபடிஎன்னை காத்திடப்பா நான் உனது உண்மையான பக்தனானல் — காலதாமதம் ஆகிறது. என் கடமையை நான் நிறைவேற்ற வேண்டும்.

சா (முகத்தை மூடியிருக்கும் முந்தானையால் தன் கண்ணை துடைத்துக் கொள்கிறாள்)

ஆ பெண்ணே வருத்தப்படாதெ நான் ஏதோ முன் ஜென்மத்தில் செய்த பாபம் உன்னையும் பிடிக்கிறதே, என்னை மன்னிப்பாயாக (தன் நாற்காலியை சற்று இழுத்து அதன் மேல் உட்கார்ந்து) கண்மணி இதுவரையில் உன் மனதிலிருந்ததை தெரிவித்தாய் இனி என் மனதிலிருப்பதை உண்மையாக உனக்குத் தெரிவிப்பது உன்னை அக்னி சாட்சியாக மணந்த கணவனாகிய என் கடமையாகும். சொல்லவா?

சா சொல்லுங்கள்.

ஆ உன்னை மணப்பதாக நான் ஒப்புக்கொள்வதற்கு முன்பாக-உன்னைப் போன்ற உத்தமியாகிய வேறொரு பெண்ணை அவள் மீது காதல் கொண்டு அவளை அன்றி வேறொருத்தியை மணப்பதுமில்லை, தீண்டுவதுமில்லை என்று — இதோ நாம் பேசிக்கொண்டிருப்பதை கேட்டுக்கொண்டு உள்ளே நகைத்துகொண்டிருக்கும் இந்த (கிருஷ்ண உருவை காட்டி) கபட நாடக சூத்திரதாரியாகிய கிருஷ்ணபகவானுடைய விஸ்வ ரூபங்களில் ஒன்றாகிய ஒற்றியூரான் சன்னிதியில் பிரமாணம் செய்து கொடுத்தேன்.

சா ஐயோ!

ஆ பெண்மணி பாட்டியாகிய நான் என் கதையை கூறித்தான் ஆகவேண்டும்.

சா (மிகுந்த மெல்லிய குரலுடன்) சொல்லுங்கள்.

ஆ அச்சமயம் நீ ஒருத்தி இவ்வுலகத்தில் இருப்பதையும் உன்னை நான் மணக்க வேண்டுமென்று என் சிறு வயதில் என் பெற்றோர் இட்ட ஆணையையும் அறிந்திலேன், பிறகு என் தாய் தந்தையர்கள் கட்டளையை நிறைவேற்றுவதாக அவர்களுக்கு நான் செய்து கொடுத்த பிரமாணத்தின்படி உன்னை நான் மணக்க வேண்டுமென்று, என் சிறுவயது முதல் தன் சொந்த மகனைப்போல் என்னை வளர்த்து கல்வி கற்பித்த என் சிற்றப்பா என்னை வற்புறுத்தினர். அதன் மீது பெரிதும் மனம் கலங்கினவனாய் — எனக்கு அது வரையில் ஞானோபதேசம் செய்து வந்த மகான் ஒருவரிடம் போய் இந்த தர்ம சங்கடத்திற்கு நான் என்ன செய்வது என்று கேட்க அவரும் என் மாமன் மகளாகிய உன்னையே என் பெற்றோர்களின் கட்டளைப் படியும் என் சிற்றப்பாவாகிய வளர்த்து வந்தவர் கட்டளைப்படியும்—மணக்க வேண்டுமென்று தெரிவித்தார். இம் மூவர்களின் கட்டளையை நிறைவேற்றுவதே என் கடமை என்று உன்னை மணக்க இசைந்தேன். பிறகு வியாதியால் நீ பீடிக்கப்பட்டிருந்ததை அறிந்தும் — இவ்விஷயத்தில் அநுகுணவதியாகிய நீ என்னை விடுவிக்க இசைந்தபோதிலும் — என்ன நேர்ந்தபோதிலும் என் கடமையை நிறைவேற்ற வேண்டுமென்றும் என் தீர்மானத்தை உன் தந்தைக்கு தெரிவிக்கச் செய்தேன். அதன்படி இன்று காலை உன்னை மணந்தேன் இப்பொழுது உன் உண்மையான தீர்மானத்தை எனக்குச் சொல்.—வேறொருத்தியைக் காதலித்து அவளையே மணப்பதாக சத்தியம் செய்துவிட்டு உன்னை நான் மணப்பது சரியா? — தவறா? நீயே சொல்.

சா சற்று யோசித்து நீங்கள் செய்தது தவறு என்று கூற உங்கள் மனைவியாகிய நான் — யார்?

ஆ ஒன்றும் பயப்படவேண்டாம் உன் மனதிலிருக்கும் உண்மையை சத்தியமாய் கூறு இது என் கட்டளை.

சா (தழுதழுத்த குரலுடன்) நீங்கள் செய்ததுதான் சரி.

ஆ சரி, சரிதான் இதற்காக என் காதலிக்கு நான் செய்த பிரமாணத்தினின்றும் தவறிய பாபத்திற்கு யார்

பதில் சொல்வது?—நீ சுலபமாய் சொல்லிவிட்டாய். ஒரு வேளை உன்னை மணந்தேன் என்ற சந்தோஷத்தினால் —அவள் கதி என்ன ஆவது அவள் மனம் என்ன தடுமாறும் இதையோசித்தாயா?

சா வாஸ்தவம்—ஆனால் அவளை—உம் நீங்கள் கல்யாணம் செய்துக்கொண்டால்?

ஆ பெண்ணே நீ இதுவரையில் மிகவும் புத்தி சாதுர்யமாய் பேசிக்கொண்டு வந்தாய், இப்பொழுதென்ன இப்படி மடத்தனமான கேள்வி கேட்கிறாய் என்னே? — தற்காலத்திய நியாய சட்டத்தின்படி ஒரு ஆடவன் ஒரு பெண்ணுக்கு மேல் விவாகம் செய்துகொள்ளக் கூடாது. அப்படி செய்தால் அவன் சிறைச்சாலை தண்டனைக்கு உள்ளாவான். இப்படிப்பட்ட சட்டம் ஒன்று அமுலில் இல்லாவிட்டாலும் ஒரு மனைவி இருக்க மற்றொரு பெண்ணை மணம் செய்துக்கொள்ளேன்; அவளும் இதற்கு இசையாள், நான் ஒருத்தியை மணந்தேன் என்கிற சமாசாரம் அவளுக்கு எட்டியவுடன் அப்பெண்ணுடனாவது அவர் சுகமாய் வாழட்டும் என்று எண்ணி தன் உயிர் துறப்பாள் அந்த உத்தமி.

சா ஆனால்—அப்படி நான் செய்கிறேனே நீங்கள் பிறகு அவளுடன் சுகமாய் வாழ்ந்திருங்களேன்?

ஆ பெண்மணி இப்பொழுது நான் என்ன யோசிக்கின்றேன் தெரியுமா? உங்கள் இருவரில் யார் அதிக மேம்பட்டவர்கள் என்றே யோசிக்கின்றேன் — ஐயோ நீயே அப்பெண்மணியாய் இருந்திருக்கலாகாதா!—

(படுக்கை அறையில் வைத்திருக்கும் ஒரு கெடிகாரம் மணி அடிககிறது).

ஆ என்ன புத்தியீனம் — இச் சகுனங்களிலெல்லாம் என்ன இருக்கிறது (எழுந்திருந்து சற்று உலாவி) கிருஷ்ண பரமாத்மா இதுவும் உனக்கு ஒரு குறும்பா, அல்லது என் மனதிடத்தைப் பரிசோதிக்க வேண்டுமென்று இன்னமும் உனது இச்சையா பரமாத்மாவாய் என் உள்ளே நீ வியாபத்திருந்தும் என் சஞ்சலம் நீ சற்றும் அறிகிலேயோ. பெண்ணே இப்படி நான் யோசித்துக் கொண்டு போவேனாகில் எனக்கு பயித்தி

யம் பிடித்து போம். இதனின்றும் தப்ப ஒரே வழி தான் உண்டு நான் உடனே வீட்டைவிட்டு மயிலாப்பூருக்குப் போய் அங்கிருக்கும் என் குருநாதராகிய கீதாநந்தர் பாதத்தில் சரணம் அடைந்து நான் துறவு பூண்கிறேன். அப்படிச் செய்வேனுகில் என் காதலிக்கு நான் செய்து கொடுத்த பாதி பிரமாணத்தையாவது காப்பாற்றினவனுவேன். அப்படியாவது அவள் மனம் கொஞ்சம் ஆறுதல் அடையும் (புறப்படப் பார்க்கிருன்)

சு. ஐயோ, கொஞ்சம் பொறுங்கள்—துறவறத்தை மேற்கொண்டு உங்கள் வீட்டையே ஆசிரமமாகப் பாவித்து—இங்கேயே வாழ்ந்திருக்கலாகாதா ?

ஆ. நீ என்ன செய்வாய் அப்பொழுது ?

சு. நான்—திருநீலகண்ட நாயனர் மனைவி அவள் பிரமாணத்தின்படி வேருக வாழ்ந்தது போல் நான் உம்மை தீண்டாது—வேருக வாழ்ந்து இங்கேயே—

ஆ. அந்தோ என்ன படித்திருக்கின்ருள் இவளும்—இவளது சுகத்தையும் நான் பாழாக்கினவனுனேனே—சரி இன்னும் ஒரு க்ஷணம் யோசிப்பேனுகில் என் புத்தி மாறினும் மாறிவிடும். பெண்மணி திருநீலகண்ட நாயனருடைய மனைவியிடம் எங்கே அம்மனவுறுதி காம குரோதாரிகளுக்கு ஆளாகிய அற்பனுகிய எனக்கு எங்கிருந்து வரும் ! பெண்மணி எனக்கு உத்தரவு கொடு. சன்யாசம் கொள்ள உடனே போகிறேன்.

சு. நான் உத்தரவு கொடுக்காவிட்டால் ?

ஆ. பெரிதல்ல சன்யாசம் கொள்ள விரும்புபவனுக்கு அவன் தாய் உத்திரவு வேண்டுமேயொழிய மனைவியின் உத்தரவு வேண்டியதில்லை. என்னை மன்னிப்பாய் (விரைந்து போகப்பார்க்கிருன்)

சு. (விரைந்துபோய் அவனது கையைப் பிடித்து தடுத்து) அத்தான்—நான்—

ஆ. பெண்ணே நீயார்! (அவளது கரத்தைக் கெட்டியாய்ப் பிடித்து கொண்டு) என் மோதிரம்!—உன் கையில் எப்படி வந்தது ?—இது யாருடையது தெரியுமா?

சு. தெரியும்.

ஆ. (கோபத்துடன்) யாருடையது ?

சு. முன்பு உங்களுடையது—இப்பொழுது என்னுடையது

ஆ. (அதிக கோபத்துடன்) பொய் பேசுகிருய். இதை என் காதலியின் விரலில் ஒற்றியூரில் மகிழ மாத்தடியின் கீழ் இட்ட பொழுது அதை தன் உயிர் போனலும் கழட்டுவதில்லை என்று அவள் பிரமாணம் செய்து கொடுத்தாள். ஆகவே அவளைக் கொன்ருவது இதை நீ எடுத்துக் கொண்டிருக்க வேண்டும், அவளிடமிருந்து திருடியாவது எடுத்துக்கொண்டிருக்கவேண்டும். அவள் தன் பிரமாணத்தினின்றும் மாறியிருக்க மாட்டாள்.

சு. (தன் சொந்தக் குரலுடன்) வாஸ்தவம்—அவள் பிரமாணத்தினின்றும் தவறவில்லை-நான் அவளைக் கொல்லவுமில்லை—இம்மோதிரம் நான் திருடவுமில்லை.

ஆ. அவள் குரல்! பெண்ணே நீயார்? (அவள் முக்காட்டை நீக்குகிருன்) —சுவர்ணபாய்!—நான் கனவு காண்கிறேனு—அல்லது எனக்கு பயித்தியம் பிடித்திருக்கிறதா? — நீ உண்மையில் சுவர்ணபாயாயிருந்தால்—உடனே எனக்குத் தெரிவி—இது கனவல்லவே ?

சு. நினைவுதான், நான் சுவர்ணபாய்தான்.

ஆ. ஐயோ எனக்கு சந்தேகமாயிருக்கிறது; இது சித்த பிரமையாயிருந்தால் என்ன செய்வேன் !

சு. சித்தபிரமையல்ல உண்மைதான்.

ஆ. என்ன ஆச்சரியம் !— இன்னும் எனக்கு சந்தேகமாகவே யிருக்கிறது. இது கனவல்ல என்பதை நான் அறிவதற்காக என் கையை நன்ருய் கிள்ளு.

சு. (அவர் கையைப் பிடித்து) பிராணநாதா—கனவல்ல நான் சுவர்ணுதான்.

ஆ. ஆனல் உன்னையா நான் காலை மணந்தேன் !

சு. ஆம் உமது மாமன் மகளாகிய—சுவர்ணபாயைதான் நீங்கள் மணந்தீர்கள்.

ஆ. இது உண்மையாயிருக்குமா ? நீயா என் மாமன் மகள் ?

சு. ஆம்.

ஆ. இதையேன் எனக்கு முன்பே தெரிவிக்கவில்லை ?

சு. இந்த உண்மை கொஞ்ச நாளைக்கு முன்புதான் எனக்குத் தெரிந்தது.

ஆ. எப்படி தெரிந்தது? எப்பொழுது தெரிந்தது? எனக்கு ஏன் முன்பே தெரிவிக்க வில்லை? சற்று விளங்கச் சொல் விரைவில்.—இப்பொழுதும் எனக்குச் சந்தேக மாயிருக்கிறதே சுவர்ண உட்கார்ந்து சொல் (இருவரும் நாற்காலிகளில் உட்காருகிறார்கள்.)

ஆ. இந்த உண்மையை நான் முன்பே அறிந்திருப்பேனாகில் —இதுவரையில் நான் பட்ட எமவாதனை யெல்லாம் நேர்ந்திராதே!

சு. நாதா முன்பே கூறாததற்காக என்னை மன்னிக் வேண்டும். உமது குருவாகிய கீதானந்தருக்கு நான் கொடுத்த வாக்கினால் இதுவரையில் கட்டுப்பட்டிருந் தேன்.

ஆ. கீதானந்தருக்கா! அவரை எப்பொழுது பார்த்தாய்? எப்படிப் பார்த்தாய்? ஏன் பார்த்தாய்?

சு. நான் சுருக்கமாய் சொல்லுகிறேன் சில மாதங்க ளுக்கு முன்பாக ஒரு நாள், என் பெற்றோர்கள் "நீ உன் அத்தையின் மகனை மணக்கவேண்டும்" —என்று வற் புறுத்தி எனக்கு எழுதியபோது—நான் உமக்கு செய்த பிரமாணத்தினின்றும் எப்படித் தவறுவது என்று கலங்கினவளாய் அக்கடிதத்தை எடுத்துக் கொண்டு சென்னையில் நீர் எனக்கு கூறிய விலாசத்துக்கு போய் இந்த தர்மசங்கடத்திற்கு என்ன செய்வது என்று உம்மையே கேட்க வேண்டுமென்று அங்கு சென்று பார்க்க அச்சமயம் நீர் வீட்டிலில்லை — அங்கிருந்த உமது வேலை ஆளோ அல்லது யாரோ ஒருவன்—நீர் ஒரு வேளை அடையாரில் சாந்தி ஆஸ்ரமத்துக்கு போயிருக்கலாம் என்று தெரிவித்தான். உடனே அதற்கு வழி தெரிந்து கொண்டு அங்கு சென்றேன். ஆஸ்ரமத்தில் உள்ளே செல்ல லஜ்ஜைப் பட்டவளாய் கொஞ்சம் யோசித்துக் கொண்டு வெளியில் நின்றேன் அச்சமயம் பலர் வருத்தத்துடன் உள்ளே சென்றவர் கள் வரும்போது முகமலர்ச்சியுடன் வந்தார்கள். அவர் கள் பேசிய வார்த்தைகளினால் தங்கள் மனதிலிருந்த சங்கடத்தையும் சஞ்சலத்தையும் ஆஸ்ரமத்து தலைவர் தன் அன்பான வார்த்தைகளினால் போக்கடித்தனர் என்பதை அறிந்தவளாய் அவர்கள் அனைவரும் போன

வுடன் சற்று தைரியம் கொண்டு உள்ளே சென்று என் விர்த்தாந்தத்தை எல்லாம் கூறிஅவரது உபதேசத்தைக் கேட்டேன். நான் கூறியதைக் கொண்டு உடனே அவர் நமது பந்துத்வத்தை அறிந்து கொண்டார்.

ஆ. அவரும் ஏன் எனக்கு இந்த உண்மையை தெரிவிக்கவில்லை?

சு. அதற்கும் ஓர் காரணம் இருக்கின்றது. அவர் முதலில் தான் அறிந்த உண்மையை எனக்குக் கூறவில்லை. என் மனதை பரிசோதிக்க முதலில் பல கேள்விகள் கேட்டார். கடைசியில்தான் இதற்கு முன்பாக நீங்கள் வந்து உமக்கு நேரிட்ட தர்ம சங்கடத்தை கூறி தன் உபதேசத்தை கேட்டதாகவும் அதற்கு அவர் "நீ உன் பெற்றோர்களின் கட்டளைப்படியும் உன்னை வளர்த்து வந்தவர் கட்டளைப் படியும் உன் மாமன் மகளை மணப்பதே சரி" என்று கூறியதாகவும் தெரிவித்தார். இதற்கு முதலில் நீங்கள் பல ஆட்சேபணைகள் கூறி — சுருக்கி சொல்லுமிடத்தில் கடைசில், அவர் உபதேசித்தபடி நடப்பதாக ஒப்புக் கொண்டதாகக் கூறினார் பிறகு அன்று நான் அவருக்குக் கூறிய மொழிகளால் நீர் காதலித்த பெண்ணும் உமது மாமன்மகளும் ஒருத்தியே என்று சந்தோஷப்பட்ட போதிலும்—உமது மனோதிடத்தை பரிசோதிக்க எண்ணினவராய் "அம்மா எப்படியும் உன்னை அவன் மணப்பான் ஆயினும் கல்யாணம் ஆகி உங்கள் ஜாதியின் வழக்கப்படி அன்றிரவு சயனக் கிரகத்தில் உன்முகத்தை அவன் பார்க்குமளவும் இந்த உண்மையைஅவனுக்கு நீ தெரிவிக்காதே என்று கேட்டார். அவர் என் சஞ்சலத்தை தீர்த்து சந்தோஷத்தை உண்டு பண்ணினதற்காக கைமாறாக அப்படியே ஆகட்டும் என்று இசைந்தேன். பிறகு—

ஆ. பிறகு என்ன?

சு. அதையும் உமக்கு நான் கூறவேண்டியது அவசியம்.

ஆ. இன்னும் என்ன விந்தை?

சு. விந்தையல்ல, விபரீதசம்பவம். நான் பட்டணத்திலிருந்து திரும்பி திருச்சிராபள்ளி வந்தவுடன் முன்பே இருந்த சிறிய ஜுரம் அதிகமாய்

பெரிய அம்மையாய் முடிந்தது. அதிலிருந்து நான் தப்புவது கஷ்டமென்றே எங்கள் குடும்ப வைத்தியர் எண்ணினர் என்று பிறகு அறிந்தேன். அச்சமயத்தி லெல்லாம் நான் வாக்களித்தபடி உம்மை மணந்த பின் மடிந்தாலும் போதும் என்று பிரார்த்தித்தேன்.

ஆ. இதைக் கேட்பதும் எனக்குக் கஷ்டமாயிருக்கிறது! சீக்கிரம் முடி இதை—வேறு ஏதாவது பேசுவோம்.

சு. இதோ முடித்து விடுகிறேன்—அம்மை நீங்கி மூன்று முறை ஸ்நானம் செய்த பிறகு அகஸ்மாத்தாய் ஒரு நாள் என் முகத்தை கண்ணாடியில் பார்த்தபோது, அதிலிருந்த அம்மை குறிகளைக் கண்டு பயந்தவளாய், என் பெற்றோர்களுக்கு நான் காலேஜிக்கு அவசியம் போக வேண்டுமென்று சாக்கு சொல்லி விட்டு பட்டணம் போய் மயிலாபூரில் கீதானந்த ஸ்வாமியை கண்டேன் மறுபடியும்.

ஆ. எதற்காக?

சு. சொல்லுகிறேன் அவர் பாதம் பணிந்து என் உடல் நிலைமையை அவருக்கு அறிவித்து, என் காதலர் என்னை மணப்பதாக கூறிய பிரமாணத்தினின்றும் நான் விடுவிக்க போகிறேன், அதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டேன்.

ஆ. அவர் அதற்கு என்ன பதில் உரைத்தார்?

சு. "அம்மா என் சிஷியன் குணம் உனக்கு தெரியாது, நீ விடுவித்தாலும் அவன் அதற்கு இணங்கமாட்டான். —வேண்டுமென்றால் உன் அபிப்பிராயத்தை உன் பெற்றோர்கள் மூலமாக அவனுக்கு தெரிவித்துபார், தன் மாமன் மகளாகிய உன்னை எப்படியும் மணக்க வேண்டுமென்று நிர்ப்பந்திப்பான்" என்று சொல்லி என் மனதைத் தேற்றினர். பிறகு நான் அவரிட மிருந்து விடைபெற்றுக் கொண்டபோது "ஆயினும் அம்மா உன் மணத்தை முடித்து உன் முகத்தை அவன் பார்க்குமளவில் நீதான் அவன் காதலித்த பெண் என்பதை தெரிவியாதே" என்று சொல்லி அனுப்பினர்—பிறகு நடந்த காரியமெல்லாம் உமக்கு தெரியுமே?

ஆ. என் குருநாதரும் நீயும்—இருவருமாய் சேர்ந்து இந்த ரகசியத்தை எனக்கு வெளியிடாது இவ்வளவு தூரம் என்னை ஆட்டிவைத்தீர்கள் அல்லவா?

சு. நாதா என்னை மன்னிக்க வேண்டும் நான் என்ன செய்வது? இதுவரையில் என் வாக்கால் நான் கட்டுண்டிருந்தேன் என்னை மன்னிக்க வேண்டும்.

ஆ. (சிரித்துக் கொண்டே) அதற்கென்ன தடை எல்லாம் சந்தோஷமாய் முடிந்த பிறகு உன்னை மன்னிப்பது என்ன கஷ்டம்?—எல்லாம் இதோ நாம் பேசிக் கொண்டிருக்கும் ரகசியத்தை எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கும் இந்த திருட்டு கிருஷ்ணபகவான் செயல் அவன் செயலை அறிந்தார் யார்! — எனக்கு தூக்கம் வருகிறாப்போலிருக்கிறது — படுக்கப்போவோமா?

சு. நாதா என் மீது கோபியாதீர் இன்னும் ஒரே-கடைசி - கேள்வி.

ஆ. இப்படியே உன் கடைசி கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்லிக்கொண்டிருப்பதானால் இரவெல்லாம் கழிந்து போகும் இப்படியே, உனக்கு இரண்டு நிமிஷம் தான் கொடுக்கிறேன், அதற்குள் கேட்டுமுடி உன் கடைசி கேள்வியை.

சு. அத்தான் என் முகத்தை நன்றாய் உற்றுப்பாரும் (எழுந்து நின்று தன் முக்காட்டை முற்றிலும் அகற்றுகிறாள்) -

ஆ. என்ன முகம் மாறியிருக்கிறது என்றாயே - எனக்கு ஒன்றும் தெரியவில்லையே

சு. அதெல்லாம் உதவாது முகத்தில் அம்மை குறிகள் தெரியவில்லையா?

ஆ. இது விகாரம் என்று எந்த மடையன் சொன்னது?

சு. இதெல்லாம் உதவாது ஆணைபடி என் கேள்விக்கு பதில் சொல்லுங்கள்.

ஆ. அந்த ஒற்றியூரான் ஆணைபடி சொல்லுகிறேன் கேள் நீ என் வார்த்தையை நம்பினாலும் சரி நம்பாவிட்டாலும் சரி - அன்று நான் பார்த்த பொழுது இருந்ததைவிட இப்பொழுது உன் முகம் அதிக அழகாய் தோற்றுகிறது.

சு. விளையாட்டாக சொல்லுகிறீர்களா என்ன?

ஆ. சத்தியமாக சொல்லுகிறேன் நான் சொல்வதை கேள்—சந்திரனுக்கு களங்கம் இருப்பதினல் அவன் அழகு அதிகப்படவில்லையா ?- அது போல இந்த அம்மை வடுக்கள் உன் முகத்தை அழகு பெறச் செய்கின்றது. அன்றியும் உன் அருக்குணமானது, முன்பு இல்லாத ஓர் சோபையை கொடுத்திருக்கிறது என் மனதிற்கு.

சு. நாதா இவ்வார்த்தையை நம்பலாமா ?

ஆ. இன்னுமா சந்தேகம் - (என்று சொல்லி அவள் முகத்தில் அம்மை குறிகள் செறிந்திருக்கும் வலது கன்னத்தை முத்தமிடுகிருன்) கண்ணே இப்பொழுதாவது நம்புகிருயா ?

சு. நம்புகிறேன் (தன் ஆடையிலிருந்து ஒரு நிருப்பத்தை எடுத்து அவனிடம் கொடுக்கிருள்.)

ஆ. இதென்ன கடிதம்? இதையெல்லாம் படிக்க எனக்கு சாவகாசமில்லை (சிரித்துக்கொண்டே) எனக்கு தூக்கம் வருகிறது, நான் தூங்கப்போகிறேன் நாளை காலை படிக்கிறேன் இந்த கடிதத்தை.

சு. இது கீதானந்தர் எழுதியது.

ஆ. கீதானந்தரா ?

சு. ஆம் படித்துப்பாரும் எல்லா விபரமும் விளங்கும் உமக்கு.

ஆ. (விரைவில் அதை பிரித்து படித்து பார்த்து) எல்லாம் அவருடைய ஆசீர்வாதம் — சுவர்ண இது உனக்கு எப்படி கிடைத்தது ?

சு. நமது விவாக பத்திரிகை ஒன்றை அவருக்கு என் தந்தை மூலமாக அனுப்பினேன்; அதற்கு பதில் எனக்கு எழுதி அதில் இதை உமக்கு கொடுக்கும்படியாக எழுதி யிருக்கிருர்.

ஆ. சந்தோஷம்—ஆயினும் ஒரு சந்தேகம். நமது விவாக பத்திரிகையில் உன் பெயர் லட்சுமிபாய் என்று இருந்ததே ? — உன் பெயரை சுவர்ணபாய் என்று ஏன் மாற்றி சொன்னய் ?

சு. அதுவா? (சிரித்துக்கொண்டே) — என் தாய் தந்தையர்கள் எனக்கு இட்டபெயர் லட்சுமிபாய் தான், நான் சென்னையில் காலேஜில் சேர்ந்தபோது என் வகுப்பில் எனக்கு முன்பே இரண்டு மூன்று லட்சுமிபாய்கள் வந்து சேர்ந்திருந்தார்கள், அதன் பேரில் எங்கள் தலைமை ஆசிரியர் ஒரு வகுப்பில் எத்தனை லட்சுமிபாய்கள் இருக்கிறது, உன் பேரை மாற்றிக் கொள் என்று வேடிக்கையாய் சொன்னார்; அப்படியே ஆகட்டும் என்று சுவர்ணபாய் என்று மாற்றிக்கொண்டேன் —சுவர்ணபாய் என்பது என் தாத்தா எனக்கு வைத்தபெயர். அது முதல் எங்கள் கல்லூரியில் அப்பெயரே எனக்கு வழங்கி வந்தது — உங்களுக்கு என்ன லட்சுமிபாய் வேண்டுமா? சுவர்ணபாய் வேண்டுமா?

ஆ. எனக்கு — இரண்டுபேரும் வேண்டும் (இரண்டு கன்னத்திலும் முத்தமிடுகிறான்) வா உறங்கப் போவோம்.

சு. குருநாதர் என்ன எழுதியிருக்கிறார் உமது கடிதத்தில்?

ஆ. அந்த ராமாயணத்தை யெல்லாம் படித்துக்காட்ட நேரமில்லை, கடைசி வாக்கியத்தை மாத்திரம் படிக்கிறேன் கேள் (படிக்கிறான்) — "நீங்கள் இருவரும் சந்தோஷமாய் மணந்து பல்லாண்டுகள் இல்லறம் நெறிதவறாது நடத்தி உங்கள் முதிர் வயதில் வானபிரஸ்த ஆஸ்ரமம் மேற்கொண்டு கடைசியில் சன்யாசம் பூண்டு எனக்கு பின் இந்த கீதாஸ்ரமத்தை நடத்தி பரமாத்மாவின் பாதத்தில் ஐக்கியம் ஆவீர்களாக. நல்ல இல்லறமே தூய துறவறமாம் என்பதை என்றும் மறவாதீர்கள் — எல்லாம் கீதாசாரியருடைய பேருளாம்" கண்மணி இவ்வளவு நன்மையை நமக்கு அளித்த கீதாசாரியரை தொழுவோம் முன்பு (இருவரும் அங்கிருக்கும் கிருஷ்ண விக்கிரகத்தைத் தொழுகிறார்கள்.)

ஆ. ஏ கிருஷ்ணமூர்த்தி! உமது கீதையில் கூறியபடி என் பாபங்களை எல்லாம் போக்கினீர், துயரத்தை எல்லாம் நீக்கினீர் உமது பேருளே அருள்.

காட்சி முடிகிறது.